# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, DECEMBER 01, 2021

புதன்கிழமை டிசெம்பர் 01, 2021 | ஒளி: 07 கதிர் 167 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE


யாழ். மாநகர சபை அமர்வு

## செங்கோலுடன் முதல் தடவையாக ஆரம்பம்

எஸ்.நிதர்ஷன், எம்.றொசாந்த்



யாழ். மாநகர சபை அமர்வு, செங்கோலுடன் மேயர் மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது

அண்மையில், சிவபதமடைந்த நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 10ஆவது நிர்வாக அதிகாரி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண

தொடர்ச்சி P2

மாதகல் கிழக்கில் காணி அளவீடு

## மக்களின் எதிர்ப்பால் தற்காலிகமாக நிறுத்தம்

### கொட்டான்களுடன் கடற்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்

எம்.றொசாந்த், எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம் - மாதகல் கிழக்கு பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளை சுவீகரிக்க நேற்றும் முயற்சிக்கப்பட்டது. எனினும், மக்களின் கடுமையான எதிர்ப்பை அடுத்து, அம்முயற்சி கைவிடப்பட்டது. அத்துடன், அச்செயற்பாடு, தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மாதகல் கிழக்கு ஜெ 150 கிராம உத்தியோகத்தர் பிரிவு, குசுமந்துறையில் தனியாருக்கு சொந்தமான 1 பரப்பு காணி, கடற்படையினரின் தேவையின் சுவீகரிப்புக்காக அளவீட்டு பணிகள், நேற்று முன்தினம் (29) நில அளவை திணைக்களத்தால் முன்னெடுக்கப்படவிருந்தது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் (28) இரவு 11 மணியளவில், கடற்படையினர் தமது வீட்டுக்கு வருகைதந்து காணியை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்து கையொப்பம் வைக்குமாறு கேட்டதாக,

தொடர்ச்சி P2









பண்டிகைக் காலங்களில்

## முடக்க மாட்டோம்

**உத்தியோக பூர்வமாக இதுவரை கலந்துரையாடவில்லை**

**கொரோனாத் தொற்று கட்டுப்பாட்டில் உள்ளது**

மகேஸ்வரி விஜயனந்தன்

பண்டிகைக் காலங்களில் நாட்டை முடக்கும் எதிர்பார்ப்பு அரசாங்கத்துக்கு இல்லையென தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஷ் பத்திரண, நாட்டை முடக்குவது குறித்து, உத்தியோக பூர்வமாக இதுவரை எவ்வித கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்படவில்லை என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (30) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சிலிண்டர் வெடிப்புக்கள்;

## சி.ஐ.டி விசாரணைக்கு சஜித் அழைப்பு

பா.நிரோஸ்



சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பங்கள் தொடர்பில் உடனடியாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் (சி.ஐ.டி) விசாரணைகளை மேற்கொண்டு, குற்றவாளிகளை சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும் என, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2

திடீரென மின் தடை ஏற்பட்டது ஏன்?

## சதியா, கோளாறா? விசாரணைகள் ஆரம்பம்



கொத்மலையில் இருந்து பியகம உப மின் நிலையத்துக்கு மின் விநியோகிக்கும் கேபிள்களில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, நேற்று முன்தினம் (29) இரவு நாட்டின் பல பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டமை தொடர்பில்,

தொடர்ச்சி P2

## புதிய எம்.பி



வெற்றிடமாகவுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு மஞ்சு லலித் வர்ணகுமார நியமிக்கப்படவுள்ளார் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## நாட்டில் சிலிண்டர் வெடிக்கவில்லை

### அண்மித்த பகுதிகளே வெடித்துள்ளதாக டலஸ் தெரிவிப்பு

மகேஸ்வரி விஜயனந்தன்



தற்போது நாட்டில் இடம்பெற்று வரும் சமையல் எரிவாயு தொடர்பான சம்பவங்களின் அடிப்படையில், சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு எந்த பிரதேசத்திலும் பதிவாகவில்லை. ஆனால், சிலிண்டருக்கு அண்மித்த

தொடர்ச்சி P2

எரிவாயு விவகாரம்;

## அடுப்படிக்குச் செல்ல மக்கள் அஞ்சுகின்றனர்

### பிரதான எதிர்க்கட்சி முறைப்பாடு

எரிவாயு சிலிண்டர்கள் வெடித்தமை மற்றும் அவற்றின் கலவை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, நுகர்வோர் விவகார அதிகாரசபையிடம், நேற்று (30) முறைப்பாடு செய்தது.

கட்சியின் எம்.பிக்களான ஜே. சி. அலவத்துவல, முஜிபூர் ரகுமான், ஹெக்டர் அப்புஹாமி, திலிப் வெதராச்சி, சுஜித் சஞ்சய பெரேரா மற்றும் பலர் முறைப்பாடு வழங்குவதற்குச் சென்றிருந்தனர். தேசிய பாதுகாப்பை வழங்குவதாக பெருமை கூறிக் கொண்டு பதவிக்கு வந்த அரசாங்கத்தின் கீழ், இன்று சமையலறை வேலைகளை

தொடர்ச்சி P2

ஆடைத் தொழிற்சாலை

## கழிவறையிலிருந்து சிசுவின் சடலம் மீட்பு

**பதுலுஓயா பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கொடுத்துள்ளார்**

**இளம் தாயும் வைத்தியசாலையில் அனுமதி**

பதுலுஓயா, நியங்கந்தர பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் கழிவறையில் இருந்து பெண் சிசு ஒன்றின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார், நேற்று (30) தெரிவித்தனர்.

தாயார் தான் பணிபுரியும் ஆடைத்தொழிற்சாலையின் கழிவறையில் சிசுவை பிரசவித்துச் சென்றுள்ளார் என்றும் நேற்று முன்தினம், தொழிற்சாலைக் காவலாளியால் சிசு கண்டெடுக்கப்பட்டு, உடனடியாக அவர் தொழிற்சாலை நிர்வாகத்துடன் பதுலுஓயா பொலிஸ் நிலையத்துக்கு தகவல் கொடுத்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## ஏகபோக உரிமையை இந்தியாவுக்கு வழங்கவில்லை

மகேஸ்வரி விஜயனந்தன்

எரிபொருள் விநியோத்துக்கான ஏகபோக உரிமையை இந்தியாவுக்கு வழங்குவதற்கு எவ்வித தீர்மானமோ, கலந்துரையாடலோ முன்னெடுக்கவில்லை எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஸ் பத்திரண, எதிர்காலத்திலும்

தொடர்ச்சி P2

எரிவாயு விபத்துக்கள் தொடர்பாக

## இவ்வாரத்துக்குள் அறிக்கை கையளிக்கப்படும்

### மொரட்டுவை பல்கலைக்கழகம் தெரிவிப்பு; 24 மணித்தியாலத்தில் 16 வெடிப்புகள்




எரிவாயுக் கசிவுகளால் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பான தரப் பகுப்பாய்வு குறித்த நிபுணர்களின் அறிக்கை, இந்த வாரத்துக்குள் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சிடம் கையளிக்கப்படும்

தொடர்ச்சி P2

சுகாதார வல்லுநர்களால்

## வாகனப் பேரணி போராட்டம்

ஏழு கோரிக்கைகளை முன்வைத்து, சுகாதார வல்லுநர் சம்மேளனம், கொழும்பில் நேற்று (30) பிற்பகல் வாகனப் பேரணி போராட்டத்தில் ஈடுபட்டது.

தொடர்ச்சி P2



## மொட்டு உறுப்பினர்கள் அலுவலகத்துக்குள் ஆர்ப்பாட்டம்

பிரியங்கர ஜயசிங்க


ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன (மொட்டு) பிரதேச சபை உறுப்பினர்கள், ஆனமடுவையில் உள்ள வீடமைப்பு அதிகார சபைக்குரிய புத்தளம் மாவட்ட காரியாலயத்தை உடைத்துக்கொண்டு எதிர்ப்பு நடவடிக்கைகளில் நேற்று(30) ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2

சமையல் எரிவாயு வெடிப்புக்கள்;

## இன்று கூடுகிறது விசேட ஆலோசனைக் குழு

பா.நிரோஸ்



சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கும் நிலையில், இது குறித்து ஆராய வர்த்தக அமைச்சுசார் விசேட ஆலோசனைத் தெரிவு குழு, இன்று (01) காலை கூடுகிறது.

பாராளுமன்றத்தின் நேற்றைய (30) அமர்வில் சமையல் எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

தொடர்ச்சி P2



மவுண்ட்ஜின் தோட்டத்தில்

## சட்டவிரோத மரம் தறித்தல் சம்பவம்

### விசாரணைகள் ஆரம்பம் என்கிறார் அமைச்சர் ரமேஷ்

மகேஸ்வரி விஜயனந்தன்

வட்டவளை மவுண்ட்ஜின் தோட்ட நிர்வாகத்தால் சட்டவிரோதமாக முன்னெடுக்கப்பட்டுள்ள மரம் தறித்தல் தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஷ் பத்திரண, குறித்த தோட்டம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மக்களின் எதிர்ப்பால் தற்காலிகமாக நிறுத்தம்

காணி உரிமையாளர் தெரிவித்தனர். இதையடுத்து, அளவீட்டு பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக குறித்த இடங்களில் ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, கடற்படையினர் கொட்டான்களுடன் குவிக்கப்பட்டு, மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.

காணியை அளப்பதற்கு எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டதை அடுத்து, அளவீட்டு நடவடிக்கைகளை தற்காலிகமாக கைவிட்டு, நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்விடத்தில் இருந்து சென்றுள்ளனர்.

அரசியல் பிரமுகர்கள் மற்றும் கிராம மக்கள் கடற்படை முகாமுக்கு முன்பு அமர்ந்து, தமது எதிர்ப்பை தொடர்ந்தும் வெளிப்படுத்தினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் கலந்துரையாடினர்.

சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் நாளை 2ஆம் திகதி, அழைந்து கலந்துரையாடுவதாக வாக்குறுதி வழங்கியதை அடுத்து, போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முடக்க மாட்டோம்

தொடர்ந்து தெரிவித்த அவர், தடுப்பூசி செலுத்தும் செயற்பாடு மிகவும் வெற்றிகரமாக அரசாங்கத்தால் முன்னெடுத்துச் செல்லப்படும் அதேவேளை, நாட்டின் மொத்த சனத்தொகையில் அதிகமானோர், முழுமையாக தடுப்பூசி பெற்றுக்கொண்டுள்ளனர். எனினும் இதன்மூலம் நாட்டில் கொரோனா தொற்று முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று அர்த்தம் கொள்ள முடியாது என, தெரிவித்தார்.

எனினும், பண்டிகைக் காலங்களில் மக்கள் பொறுப்புடன் செயற்படுவது அவசியம் என தெரிவித்த அவர், தமது குடும்பம், பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, சுகாதார தரப்பினரால் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படும் சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடிக்குமாறு பொதுமக்களிடம் வினயமாக கேட்டுக்கொள்வதாக குறிப்பிட்டார்.

மேலும், தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள ஒமிக்ரோன் மாறுபாடானது, மீண்டும் இந்த உலகத்தில் பாரிய ஆபத்தை உருவாக்கி வருவதால் அனைவரும் சிந்தித்து பாதுகாப்புடன் செயற்படுவது அவசியம் என்றார்.

## அடுப்படிக்குச் செல்ல மக்கள் அஞ்சுகின்றனர்

மேற்கொள்ள மக்கள் அச்சப்படுகின்றனர். இது தொடர்பாக உரிய விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகிறோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார்.

முறைப்பாடு செய்யப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது,

எரிவாயு பற்றாக்குறையை நிவர்த்தி செய்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக இன்று எரிவாயு தாங்கிகளின் கலவை தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. விரைவில் எரிவாயு சிலிண்டர்கள் தீருகின்றன என்று மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். மறுபுறம், நாடு முழுவதும் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கின்றன என்று குறிப்பிட்டார்.

நாட்டில் 40 சதவீத மக்கள் எரிவாயுவை பயன்படுத்துகின்றனர் என்றும் இதனால் அந்த மக்கள் அனைவரும் இன்று பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

## நாட்டில் சிலிண்டர் வெடிக்கவில்லை

பகுதிகளில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது என்று அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

சமையல் எரிவாயு தொடர்பில் ஒழுங்குப்படுத்துவதற்கான எவ்வித வேலைத்திட்டங்களும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை எனத் தெரிவித்த அவர், எனினும் தற்போதைய அரசாங்கம் சமையல் எரிவாயு ஒழுங்குபடுத்தல் வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளது என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (30) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், எரிவாயு ஒழுங்குபடுத்தல் இதுவரை முன்னெக்கப்படாமை கவலைக்குரிய அதேவேளை, வெட்கப்பட வேண்டிய விடயம். இந்த விடயம் தொடர்பிலும் இதன் தேவை தொடர்பிலும், விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் இந்த வருடம் செப்டம்பர் மாதம் 16ஆம் திகதி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார் என்று தெரிவித்தார்.

## இவ்வாரத்துக்குள் அறிக்கை கையளிக்கப்படும்

என, மொரட்டுவை பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. இது தொடர்பான அறிக்கை, நான்கு பேர் கொண்ட குழுவினால் தொகுக்கப்பட்டு வருவதாக, மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் இரசாயன மற்றும் செயல்முறை பொறியியல் துறையின் பேராசிரியர் சாந்த வல்பொல தெரிவித்தார்.

வீட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களில் ஏற்பட்ட கசிவுகள் தொடர்பான வெடிப்புகளைத் தொடர்ந்து, நுகர்வோர் விவகார அதிகாரசபை, சமீபத்தில் ஆறு மாவட்டங்களில் இருந்து எரிவாயு மாதிரிகளை பரிசோதனைக்காகப் பெற்றுள்ளது.

இவற்றில் 12 மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக மொரட்டுவை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் பல பகுதிகளில் எரிவாயு கசிவுகள் தொடர்பான பல சம்பவங்கள் பதிவாகியிருந்ததோடு, கடந்த நவம்பர் மாதம் 20ஆம் திகதி கொழும்பு, ரீட் அவென்யூவில் உள்ள ரேஸ் கோர்ஸ் கட்டடத்தின் தரைத் தளத்தில் அமைந்துள்ள சர்வதேச உரிமையாளருக்கு சொந்தமான உணவகத்தில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தை அடுத்து இந்த பிரச்சினை வெளிச்சத்துக்கு வந்தது.

அரசாங்கப் பகுப்பாய்வாளரின் ஆய்வுகளைத் தொடர்ந்து, வெடிப்புக்கான மூல காரணம் எரிவாயுக் கசிவு என்பது தெரியவந்தது.

## சதியா, கோளாறா? ...

உள்ளக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாக, இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ஆர்.எம்.ரணதுங்க, நேற்று (30) தெரிவித்தார்.

மின் தடை, இயற்கையாக இடம்பெற்றதா அல்லது திட்டமிடப்பட்ட ஒன்றா என்பது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று, மின்சார தொழிநுட்ப பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகள் சங்கத்தின் தலைவர், ஏ.ஜீ.யூ. நிசாந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

மின்சாரசபை கட்டமைப்பின் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் வெளியேறியமையே மின் விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவருவதற்குத் தாமதமாகியதாகத் தெரிவித்த அவர், சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் பொறியியலாளர்களின் தலையீட்டுடனேயே மின் விநியோகம் வழமைக்குக் கொண்டுவரப்பட்டமதாகவும் சுட்டிக்காட்டினார்.

கொத்மலையில் இருந்து பியகம உப மின் நிலையத்துக்கு மின் விநியோகிக்கும் 220 கிலோ வோற் மின்னழுத்த கேபிள்கள் இரண்டில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பல பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

விநியோக கேபிள்களில் ஏற்பட்ட துண்டிப்பு காரணமாக, மகாவலி நீர் மின் உற்பத்தி நிலையம் நிறுத்தப்பட்டு அதிர்வெண் வீழ்ச்சியை சந்தித்ததுடன், இதன்காரணமாக, சில உப மின் நிலையங்கள் செயற்பட முடியாமல் தானாக அணைந்து விட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

பியகம, கொட்டுகொட, ஹபரணை, காலி, மாத்தறை, பன்னிபிட்டிய, இரத்மலானை, ஸ்ரீ ஜயவர்தனபுர, குருநாகல், கிரிபத்கும்புர, அதுருகிரிய, கொஸ்கம மற்றும் சபுகஸ்கந்த ஆகிய உப மின் நிலையங்களில் திடீர் மின் தடை ஏற்பட்டதையடுத்தே நாட்டின் பல பகுதிகளில் மின் விநியோகம் பாதிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டது.

நேற்று முன்தினம் (29) இரவு 7.30 மணியிலிருந்து மின் விநியோகம் தடைப்பட்டிருந்த போதும், ஒருசில மணி நேரத்தில் மின் விநியோகம் மீண்டும் வழமைக்குத் திரும்பியிருந்தது.

# புதிய எம்.பி

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று (30) மாலை வெளியிடப்படும் என, நேற்றையதினம் கூடிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

வர்ணகுமார 2020 பொதுத் தேர்தலில் களுத்துறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் போட்டியிட்டு 46,361 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராக கடமைகளைப் பொறுப்பேற்கவிருந்த மஹிந்த சமரசிங்க தனது எம்.பி பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து அந்த ஆசனம் வெற்றிடமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கழிவறையிலிருந்து சிசுவின் சடலம் மீட்பு

பொலிசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சிசுவை உடனடியாக பதுலுஓயா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது, சிசு இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சிசு குறைப்பிரசவத்தில் பிறந்ததாகவும், கர்ப்ப காலத்தில் சுமார் 7-8 மாதங்கள் இருந்ததாகவும் மாவட்ட வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி உறுதிப்படுத்தியதாக மேலும் தெரியவருகிறது.

தொழிற்சாலை ஊழியர்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், 23 வயதான தாய் கைது செய்யப்பட்டு, தற்போது நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அறியமுடிகிறது.

சிசு குறைப்பிரசவத்தில் பிறந்ததாலும், தாய் இன்னும் உடல் தகுதி இல்லாததாலும் தாய் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார், தாய், பொலிஸ் காவலில் உள்ளார் என்று தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஏகபோக உரிமையை இந்தியாவுக்கு வழங்கவில்லை

அவ்வாறான எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாது என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று ( 30) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

நாட்டில் ஏற்பட்டுள்ள அந்நிய செலாவணி தட்டுப்பாடு காரணமாக, பொருள்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இது தற்போதைய உலக நெருக்கடியுடன் இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி என்றார்.

சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள மந்த நிலை மற்றும் வெளிநாட்டு பண பரிவர்தனை குறைவு என்பவற்றால் அந்நிய செலாவணி பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக நினைவுப்படுத்தினார்.

எரிபொருள் பாவனையில் எவ்வித குறைவும் ஏற்படவில்லை எனத் தெரிவித்த அமைச்சர், அதனால் பாரிய செலவீனங்களைச் செய்ய வேண்டியுள்ளதாகவும் நாட்டில் மருந்துக்கும் சுகாதாரம் உள்ளிட்ட விடயங்களிலேயே இறக்குமதிக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது என்றார்.

நாட்டில் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் மக்களின் வாழ்வாதாரத்தை சாதாரண முறையில் கொண்டு செல்வதற்கான அதிகபட்ச நிவாரணங்களை வழங்கவும் அரசாங்கம் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும் என தெரிவித்த அவர், எதிர்வரும் 6 மாதங்களுக்குள் உலகின் நிலை சிறந்த நிலைக்கு மாறுவதுடன் நம் நாட்டின் நிலையும் சிறப்பாக மாறும் என நம்பிக்கை கொள்வதாகத் தெரிவித்தார்.

# செங்கோலுடன் முதல் தடவையாக ஆரம்பம்

தேவஸ்தானத்தின் 10ஆவது நிர்வாக அதிகாரி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் நினைவாக, நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானம், யாழ்.மாநகர சபைக்கு செங்கோல் ஒன்றை வழங்கியது.

நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 11ஆவது நிர்வாக அதிகாரி குமரேஷ் சயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட செங்கோலுடன், வரலாற்றில் முதல் தடவையாக, நேற்றைய தினம் (30), மாநகர அமர்வு, மேயர் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது

## சி.ஐ.டி விசாரணைக்கு சஜித் அழைப்பு

பாராளுமன்றத்தின் நேற்றைய (30) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய சஜித்,

கடந்த 48 நாட்களில் 11 சிலிண்டர் வெடிப்பு சம்பங்கள் நாட்டில் பதிவாகியுள்ளன. இதனால் நாட்டு மக்கள் மத்தியில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பில் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது என்றார்.

ஹைப்பிரிட் சிலிண்டர்கள் என கூறி, 18 லீற்றர் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் அறிமுகப்படுத்தியதன் பின்னரே இந்த வெடிப்பு சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. இது தொடர்பில் சி.ஐ.டியினர் விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும் என தெரிவித்தார்.

## வாகனப் பேரணி போராட்டம்

கொழும்பு மாநகர சபைக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த போராட்டம் கொழும்பு, கோட்டை வரை சென்றது.

சுகாதார நிபுணர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கமும் சுகாதார அதிகாரிகளும் தவறிவிட்டதாகவும், தற்போது மருந்துகளின் விலை 300% அதிகரித்துள்ளதாகவும் சம்மேளனத்தின் இணை அழைப்பாளர் சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு இலவச முகக்கவசம் வழங்கக்கூட அரசாங்கம் தவறிவிட்டது என்றும் மேலதிக நேர கொடுப்பனவு முரண்பாடுகளை அரசாங்கம் இன்னும் தீர்க்கவில்லை என்றும் தாதியர் பட்டம் அல்லது துணை சேவைகள் பட்டம் ஆகியவற்றை அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

## மொட்டு உறுப்பினர்கள் அலுவலகத்துக்குள் ஆர்ப்பாட்டம்

மொட்டுவைச் சேர்ந்த பிரபல இராஜாங்க அமைச்சருக்கு மட்டுமே வீடமைப்பு திட்டத்தை முன்னெடுப்பதாகவும் மாவட்ட முகாமையாளருக்கு எதிராக குற்றஞ்சாட்டினர்.

அலுவலகத்தை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்த உறுப்பினர்கள், வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் டி.என்.பிரியதர்சனவை, ஒரு மணிநேரம் காரியாலயத்துக்குள் தடுத்து வைத்திருந்தனர்.

கடுமையான எதிர்ப்பு கோஷங்களை எழுப்பிய உறுப்பினர்கள், தாங்கள் எடுத்துவந்த தேங்காய்களை, அலுவலகத்துக்கு முன்பாக சிதறுதேங்காய் உடைத்தனர். " வீடமைப்பு அதிகார சபையை கைப்பற்றியிருக்கும் பேய், விட்டொழிய வேண்டுமென" கூறியே தேங்காய் உடைத்தனர்.

## இன்று கூடுகிறது விசே...

குறிப்பாக இச்சம்பவம் தொடர்பில் ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சஜித் கோரிக்கை விடுத்தார். எனினும், பாராளுமன்ற தெரிவுக்குழு என்பது நீண்ட செயற்பாடு என தெரிவித்த சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன விசேட ஆலோசனை தெரிவுக்குழுவை உடனடியாகக் கூட்ட சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதனை தொடர்ந்து சமையல் எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் ஆராய இன்று காலை 09 மணிக்குப் பாராளுமன்றத்தில் வர்த்தக அமைச்சுசார் ஆலோசனை தெரிவுக்குழு கூடும் என சபாநாயகர் அறிவித்ததோடு, சமையல் எரிவாயு தொடர்பில் பொறுப்புக்கூறிய அனைத்து அதிகாரிகளும் இக்குழுவில் கலந்துகொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இதேவேளை, இந்த ஆலோசனைக் குழுவில் உறுப்பினர்கள் இல்லாத பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வதற்கு அழைப்பு விடுத்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு தங்களது அபிப்பிராயங்களை அங்கு தெரிவிக்க வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.

## சட்டவிரோத மரம் தறித்தல் சம்பவம்

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (30) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், அரசாங்கத்துக்குச் சொந்தமான ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகிய இரண்டு நிறுவனங்களும் கடந்த ஆட்சியில் பாரிய நட்டத்தில் நடத்திச் செல்லப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் பல ஊழல் மோசடிகளும் இடம்பெற்றுள்ளன. ஆனால், தற்போது குறித்த நிறுவனங்கள் இரண்டும் நட்டங்களைக் குறைத்துள்ளன என்று தெரிவித்தார்.ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளமாக 1,000 ரூபாய் பெற்றுக்கொடுத்த பின்பே இந்த நிறுவனங்கள் தமது நட்டங்களை குறைத்துக்கொண்டுள்ளன.

மேலும், அரச பெருந்தோட்ட யாக்கத்துக்கு கீழ் நிர்வகிக்கப்படும் பெருந்தோட்டங்களில், தேயிலைப் பயிர்ச்செய்கை பண்ணப்படாத இடங்களில் மீண்டும் தேயிலை பயிர்ச் செய்கையை எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் முன்னெடுக்கவுள்ளதாகக் குறிப்பிட்டார்.




பின்வரிசை எம்.பிகள் தொடர்பில்

# சபாநாயகர் அதிருப்தி

■ பா.நிரோஸ்

ஆளுங்கட்சியினரின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் நேற்று (30) காலை சபையில் இல்லை என்பதால், சபாநாயகர் இது தொடர்பில் தனது அதிருப்தியை வெளியிட்டார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (30) அமர்வு வழமைபோல காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியிருந்த நிலையில், சமையல் எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் பல்வேறு கேள்விகளை எழுப்பிகொண்டிருந்தனர்.



ஆளுங்கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் எவரும் இதன்போது ஆசனங்களில் இல்லை என்பதை ஆளுங்கட்சியின் சபை முதல்வர் தினேஸ் குணவர்தனவுக்கு சுட்டிக்காட்டிய சபாநாயகர், இதுபோன்ற முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சியினரின் கேள்விகளுக்கு ஆளுங்கட்சியினர் பதில் வழங்குவது அவர்களது கடமை. ஆனால், இப்போது ஆளுங்கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஆசனங்களில் இல்லை என்பது கவலையளிக்கிறது என்றார்.

மேலும், இது தொடர்பில் சபைமுதல்வர் கவனம் செலுத்த வேண்டும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்கு வரும்போது மாத்திரம் பின்வரிசை உறுப்பினர்கள் அனைவரும் சபையில் இருக்கிறார்கள். அப்படியானால் ஜனாதிபதியை தினந்தோறும் பாராளுமன்றத்துக்கு வர வேண்டுமென கூற வேண்டும் என்றார்.

வைத்தியசாலைகள், பாடசாலைகளை

# மத்திய அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்

■ பா.நிரோஸ்



மாகாண சபைகளுக்குக் கீழ் உள்ள முக்கியமான வைத்தியசாலைகளை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டுவருவதையே மக்கள் விரும்புவதாக தெரிவித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எனினும் இதனை நியாயமான செயற்பாடாக தாம் பார்க்கவில்லை எனவும் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று (30) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், யாழ் போதனா வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட பதவியணிகளில் பெரும் பற்றாக்குறைக் காணப்படுகிறது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கிறார்கள். இங்குக் காணப்படும் பதவிநிலை வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 117 வைத்தியசாலைகள் 15 வைத்தியசா லைகளில் வைத்தியர்கள் இல்லை. மாகாணசபைகளுக்குக் கீழ் உள்ள வைத்தியசாலைகளை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டுவருவதை மக்கள் விரும்புகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள்;

# ஆராய குழுவை அமைத்தார் ஜனாதிபதி

## அறிக்கை வெள்ளிக்கிழமை

■ பா.நிரோஸ்



சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பில் ஆராய ஜனாதிபதி விசேட குழு ஒன்றை அமைத்துள்ளதாக தெரிவிக்கும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, இக்குழுவின் அறிக்கையை வெள்ளிக்கிழமை வழங்க வேண்டும் என ஜனாதிபதி அக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (30) அமர்வில் கலந்துகொண்டு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் கேட்ட கேள்விக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், சமையல் எரிவாயு தொடர்பில் நாட்டிலுள்ள அனைத்து மக்களும் மிகுந்த அச்சத்துடன் இருக்கிறார்கள். இந்த விடயத்தில் சமையல் எரிவாயுக்களின் நிறுவனம் பக்கம் அரசாங்கம் நிற்காது. மக்களின் பக்கமே அரசாங்கம் இருக்கிறது. சிலிண்டர் வெடிப்புகள் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் நாட்டில் பரவி வருகின்றன. சிலிண்டர்கள் வெடிக்கின்றன என்றார்கள். எனினும் எந்தவொரு சிலிண்டரும் இதுவரையில் வெடிக்கவில்லை. சிலிண்டர்கள் வெடிக்காது என்பதை நூற்றுக்கு நூறு உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

18 வீற்றர் சிலிண்டர்கள் சந்தைகளில் இல்லை. இதுவொரு ஊழல் செயற்பாடு. இதற்கு எதிராக நீதிமன்றம் சென்றிருக்கிறோம். இதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்போம். சிலிண்டர்கள் வெடிப்பை ஒருபோதும் நியாயப்படுத்த ப்போவதில்லை. இது தொடர்பில் அரசாங்கம், அரச நிறுவனங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தையும் சபையில் கூறிக்கொண்டு இருக்க முடியாது எனவும் தெரிவித்தார்.


தேசிய சுகாதார முறைமையை

# மலையகத்துக்கும் விஸ்தரிக்க வேண்டும்

■ பா.நிரோஸ்

தேசிய சுகாதார முறையை பெருந்தோட்டத்துக்கும் விஸ்தரிக்க வேண்டுமென சபையில் கோரிக்கை விடுத்த பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், மனிதாபிமான முறையிலாவது இதனை விரைந்து செய்ய வேண்டுமென அரசாங்கத்திடம் வலியுறுத்தினார்.

சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று (30) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய வடிவேல் சுரேஷ், பெருந்தோட்ட வைத்தியசாலைகள் மாகாண சபைகளுக்குக் கீழ் வருவதால், தேசிய சுகாதார முறைக்குள் அவைகள் உள்வாங்கப்படுவதில்லை. இதனால் இலவச சுகாதார முறைமை மலையக மக்களை சென்றவடைவதில்லை. பெருந்தோட்ட வைத்தியசாலைகள் கட்டம் கட்டமாக அரச வைத்தியசாலைகளாக உள்வாங்கி அபிவிருத்தி செய்வோமென அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியும் ஏன் அதனை நடைமுறைப்படுத்தப்படவில்லை என வினவினார்?



சுகாதார அமைச்சில் உள்ள பெருந்தோட்டப் பிரிவு இயங்குகிறதா? இல்லையா? எனவும் கேள்வி எழுப்பிய வடிவேல் சுரேஸ், பெருந்தோட்டத்தில் உள்ள பல வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லை எனவும் தெரிவித்தார்.

தேசிய சுகாதார வைத்திய முறையை மலையகப் பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என கூறிய, பெருந்தோட்ட வைத்தியசாலைகளின் குறைப்பாடுகளையும் சுட்டிக்காட்டி சபையில் உரையாற்றினார்.

தேசிய சுகாதார முறைமைக்குள்

# மலையக மக்களையும் உள்வாங்குக

■ பா.நிரோஸ்

76ஆவது வரவு- செலவு திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற போதிலும், தேசிய சுகாதார முறைமைக்குள் பெருந்தோட்ட மக்கள் இதுவரையில் உள்வாங்கப்படவில்லை என்பது துர்ப்பாக்கியமானது என கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமர் தெரிவித்தார்.



சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் நேற்று (30) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய, தேசிய சுகாதார முறையை நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் சென்றடையாதிருப்பது துர்ப்பாக்கியமானது. பெருந்தோட்ட மக்களை தேசிய சுகாதார முறைமை சென்றடையவில்லை எனவும் தெரிவித்தார்.

பெருந்தோட்டங்களில் உள்ள வைத்தியசாலைகள் அனைத்தையும் தேசிய சுகாதார முறைமைக்குள் உள்வாங்கப்பட வேண்டும். இதற்கு கொள்கை ரீதியான வேலைத்திட்டம் அவசியம். சுமார் 450 பெருந்தோட்ட வைத்தியசாலைகளில் வெறும் 30 வைத்தியசாலைகளை தேசிய சுகாதார முறைமைக்குள் கடந்த காலங்களில் உள்வாங்கப்பட்டுள்ளபோதிலும், அப்பணிகள் இடைநிறுத்த ப்பட்டுள்ளன.

நீர் விநியோக சேவை,பராமரிப்பு

# பணிகளுக்கு வாகனங்கள் கொள்வனவு

கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் மாவட்ட மற்றும் பிரதேச காரியாலயங்கள் ஊடக மேற்கொள்ளப்படும் நீர் விநியோக சேவை மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு அவசியமான முப்பது கெப் ரக வாகனங்கள் நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவினால் நேற்று மாவட்ட காரியாலயங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.



ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் சுமார் 325 மில்லியன் ரூபாய் செலவில் இந்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மேலும்,அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கருத்து தெரிவிக்கையில்;

குறித்த கெப்ரக வாகனங்கள் நீர் தாங்கி மற்றும் நீர் விநியோக குழாய் உள்ளிட்ட பல வசதிகளைக் கொண்டுள்ளது. இதன் காரணமாக மாவட்டத்தில் எச்சந்தர்ப்பத்திலும் மிக விரைவாக பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்

இந்த வாகனங்களை பல சிரமங்களுக்கு மத்தியில் எமக்கு பெற்றுக் கொடுத்தமைக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அதன் நிர்வாகிகளுக்கும் எனது இதயப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதி தலைவர் சட்டத்தரணி நிமல் ஆர். ரணவக, அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் சரத் ஆர் ரணசிங்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் மேலதிக பொது முகாமையாளர் கிருஷான் பிரனாந்து,அமைச்சரின் இணைப்பு செயலாளர் டி.வி ஞி. திலகசிரி மற்றும் கபுருகே எஸ் ரசித் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்



## 30 ஆவது ஆண்டு விழா

'ரீனி வீனி' பாலர்பாடசாலையின் 30 ஆவது ஆண்டு விழா அண்மையில் கொழும்பு விஷப் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கொழும்பு மாநகர உதவி மேயர் எம். ரி.எம். இக்பால் ஆசிரியைகளுக்கு கௌரவச் சின்னம் வழங்குவதைக் காணலாம்

முசலிப் பிரதேசத்தில்

# 8,000 ஏக்கர் நெற்செய்கைப் பாதிப்பு

தொடர்ச்சியாக பெய்துவரும் மழையினால் முசலிப்பிரதேசத்தில் பொற்கேணி, சிலாவத்துறை, மறிச்சுக்கட்டி கமநல சேவை நிலையங்களுக்கு உட்பட்ட சுமார் 8,000 ஏக்கருக்கு அதிகமான பெரும்போக நெற்செய்கைப் பாதிப்படைந்துள்ளது.

கடன் சுமையுடன் அதிகரித்துவரும் விலையேற்றத்தையும் தாங்கிக் கொண்டு வாழ்வாதாரத்தையும் முன்னேற்றவேண்டும் என்ற நோக்கில் இந்த முறை பெரும்போக நெற்செய்கையை முசலிப் பிரதேச விவசாயிகள் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையினால் நெற்செய்கைப் பாதிப்படைந்துள்ளது. அத்துடன் தமது வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வயல்களில் நிரம்பி வழியும் நீரினால் செய்கை பண்ணப்பட்ட நெற்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதால் மீண்டும் செய்கை பண்ணவேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே, கடனில் பெரும்போக நெற்செய்கையை ஆரம்பித்த விவசாயிகள் இந்த அனர்த்த நிலைமையினால் மீளமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அரசாங்கம் இவர்களின் நிலையை கவனத்தில் எடுத்து உதவி செய்ய முன்வரவேண்டும் என முசலிப் பிரதேச விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.



# சந்திப்பு

இந்திய கலாசாரம் மற்றும் ஜனநாயகம் குறித்து தற்போது இந்தியாவில் நடைபெற்று கொண்டிருக்கும் மகாநாட்டில் கலந்து கொண்டுள்ள கொழும்பு மாநகரசபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்க குஜராத் மாநில கலாசார மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் (Minister of Cultural and Minister of Home Development, Government of Gujarat)) ஸ்ரீ ஹர்ஸ் சங்கர்வீ ஜீ குஜராத்தில் சந்தித்தார்.

# இசைத் தென்றல் மாதாந்த நிகழ்ச்சிகள்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையின் தென்றல் அலைவரிசையில் நடாத்திவரும் 'இசைத் தென்றல் மாதாந்த நேரடி சினிமா பாடல் நிகழ்ச்சிகள்' இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கலையகத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் அபுஉபைதா மௌஜூத் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் கலாநிதி சரத் வீரசேகர பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இந் நிகழ்வின்போது அமைச்சரின் சேவையை பாராட்டியதுடன் கொழும்பில் கடந்த 40 வருடகாலமாக மரணித்தவர்களை ஜனாஸாக்களை எடுத்துச் சென்று அடக்கம் செய்துவரும் ஹூசைன் ரசாத் போல்ட், ஜனாஸா நலன்புரித் தலைவரைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். தொழிலதிபர் பஸ்லி ரூமி, தெஹிவளை கல்கிசை மாநகர சபை உறுப்பினர் சரினா முஸ்தபாவும் காணப்படுகிறார்.



# தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர் நியமனம்

ஊடக கல்வித்துறையில் சான்றிதழ் பாடநெறி தொடக்கம் முதுகலை பட்டம் வரையான கல்வியை கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் ஊடக உயர்கல்வி ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவனமாக இலங்கை பட்டய ஊடகவியலாளர் நிறுவனம் ஒன்றை நிறுவுவதற்காக ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும சமர்ப்பித்த யோசனைக்கு ஒக்டோபர் 5ஆம் திகதி அமைச்சரவை அங்கிகாரம் கிடைத்துள்ளது.



செயல்படுத்தும் நோக்கில் ஊடக அமைச்சு இலங்கை பட்டய ஊடக நிறுவனம் ஒன்றை அமைக்க பொறுப்பு வாய்ந்த நடவடிக்கை குழுவொன்றை நியமித்துள்ளது. சர்வதேச தரத்துக்கு அமைய தரமான ஊடகக் கலாசாரத்தை உருவாக்குவதும் மற்றும் உயர் தொழில் நிபுணத்துவதுடன் கூடிய ஊடகவியலாளர்களை உருவாக்குவதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அக்குழுவின் அங்கத்தவர்களாக ஊடக அமைச்சின் செயலாளர் ஜகத் பி .விஜயவீர, ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர் எச். ஹேவகே, அரசாங்க தகவல் திணைக்கள மேலதிகப் பணிப்பாளர் மிலிந்த ராஜபக்ச, ஊடக அமைச்சின் சட்ட அதிகாரி யுரேகா வேலாரத்ன, களனி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி விஜயானந்த ரூபசிங்க, இலங்கை திறந்த பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மதுஷானி கலகெதர, இலங்கை மன்ற சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி விஜயந்த உக்வத்த, முன்னாள் அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ரங்க ஜயசூரிய, இலங்கை இலத்திரனியல் ஒலிபரப்பாளர்கள் சங்க தலைவர் அசங்க ஜெயசூரிய, இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் பேரவை பிரதிச் செயலாளர் மொஹான் லால் பியதாச, தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தேவதாசன் செந்தில்வேலவர், சிரேஷ்ட ஊடகவியலாளர் மற்றும் விஞ்ஞானத்துறை எழுத்தாளர் நாலக்க ஜே. குணவர்தன மற்றும் குழுவின் செயலாளர் டபிள்யூ .பி. செவ்வந்தி(பணிப்பாளர் . அபிவிருத்தி) ஆகியோர் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

> ஊடக அமைச்சு இலங்கை பட்டய ஊடக நிறுவனம் ஒன்றை அமைக்க பொறுப்பு வாய்ந்த நடவழிக்கை குழுவொன்றை நியமித்துள்ளது

வல்வெட்டித்துறை நகர சபையின் பட்ஜெட் தோல்வி:

# தவிசாளரின் பதவி பறிபோகும்?

■ எம். றொசாந்த், எஸ் தில்லைநாதன்




வல்வெட்டித்துறை நகர சபையின் வரவு-செலவுத் திட்டம் (பட்ஜெட்), இரண்டாம் முறையும் நேற்றைய தினமும் (30) ஒரு வாக்கினால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபை வரவு-செலவுத் திட்டம் கூட்டம், நேற்றைய தினம், தவிசாளர் என். செல்வேந்திரா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, கடந்த 17ஆம் திகதி, சபையில் முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையில், நேற்றைய தினம் திருத்தங்களுடன் சபையில் முன்வைக்கப்பட்ட போது, அதுவும் தோற்கடிக்கப்பட்டு உள்ளது. வாக்களிப்பின் போது முன்னரைப் போல எதிராக ஒன்பது வாக்குகளும் ஆதரவாக எட்டு வாக்குகளும் கிடைத்தன.

இதனால் ஒரு வாக்கினால் வரவு  செலவுத் திட்டம் மீண்டும் தோல்வி அடைந்தது.

இதனையடுத்து சபைக்கு புதிய தவிசாளர், உபதவிசாளர் தெரிவு செய்யப்பட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் தவிசாளார் கே. கருணாந்தராசா (வயது 76) கொரோனா தொற்றுக்கு உள்ளாகி, கடந்த ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதியன்று உயிரிழந்தார்.

அதனை அடுத்து, புதிய தவிசாளராக என். செல்வேந்திரா, கடந்த செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதியன்று, ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார்.

இந்நிலையில் அவரால் முன்வைக்கப்பட்ட இரு வரவு-செலவுத் திட்டமும் தோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழில் உறவுகள் ஆர்ப்பாட்டம்

■ எம்.றொசாந்த், என்.ராஜ், எஸ். நிதர்ஷன்

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில், நேற்றைய தினம் (30) யாழ்ப்பாணத்தில், ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு முன்னால், நேற்று காலை 9.30 மணியளவில், இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வலிந்து காணாமல்போனோருக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வதேசமே நீதியைத் தா போன்ற பல்வேறு கோஷங்கள் இதன்போது எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற பகுதியில் பொலிஸாரும் புலனாய்வுப்பிரிவினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதி வலிந்து காணாமல் போனோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

புதிய மதுபான சாலையை எதிர்த்து

# பெரியபரந்தனில் போராட்டம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன், மு.தமிழ்ச்செல்வன்

புதிய மதுபானசாலை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி -பெரியபரந்தனில் பொது மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை நேற்று (30) முன்னெடுத்திருந்தனர்.

பெரியபரந்தன் பிரதேசத்தில் புதிதாக மதுபானசாலை ஒன்று அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பில் கடந்த காலங்களில் பெரியபரந்தன் மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுப்பட்டிருந்தனர்.

உரிய உயர் அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் ஆட்சேபனைகளை அனுப்பியதோடு பலத்தடவைகள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர். புதிய மதுபானசாலை அமையவுள்ள இடத்துக்கு அருகில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி, மற்றும் விஞ்ஞானக் கல்வி நிலையம் உள்ளிட்ட கல்வி நிலையங்கள் காணப்படுவதாக பலமுறை மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கும் மக்கள் பெரிaய பரந்தன் கிராமத்தில் 500 க்கு மேற்பட்ட குடும்பங்கள் காணப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலான குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்கள். எனவே தமது பிரதேசத்தில் புதிய மதுபானசாலை அமைவதானது பெரும் பொருளாதார மற்றும் கலாசார பாதிப்புக்களையும் ஏற்படுத்தும் என்றும் குறித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் பனை, தென்னைவள தொழிலாளர்களாக உள்ளனர். இதனால் புதிய மதுபானசாலை அமையும் போது இவர்களின் குடும்பத்தின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, குறித்த மதுபானசாலை விடயத்தில் பிரதேச மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளையும் கருத்தில் கொண்டு புதிய மதுபான சாலை அமைப்பதனை தடுத்து நிறுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.



வடமராட்சியில்

# நேற்றும் சடலம் கரையொதுங்கியது

■ செந்தூரன் பிரதீபன், எஸ்.நிதர்ஷன், எஸ். தில்லைநாதன், எம்.றொசாந்த்



வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி பகுதியில், நேற்று (30), உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளதாக, பளை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் கரை ஒதுங்கியமை தொடர்பில், பொலிஸாருக்கு மீனவர்கள் தகவல் தெரிவித்திருந்தனர்.

ஏற்கெனவே கடந்த சனிக்கிழமை, வல்வெட்டித்துறை - மணற்காடு கரையோரத்தில் இரு சடலங்களும் , மறுநாள் ஞாயிற்றுக்கிழமை, நெடுந்தீவு கடற்பரப்பில் ஒரு சடலமும் கரையொதுங்கியுள்ள நிலையில், நேற்றைய தினம் மருதங்கேணி கடற்பகுதியிலும் ஒரு சடலம் கரையொதுங்கி உள்ளது.

கரையொதுங்கிய நான்கு சடலங்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் தெரியாத நிலையில் சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் உள்ளன.

சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


ஒரு கிழமைக்குள் யாழ். மாவட்டத்தில் கரையொதுங்கிய நான்காவது சடலம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

காரைநகர் – ஊர்காவற்றுறை பாதையில்

# பயணிப்போருக்கு பாதுகாப்பு அங்கி

■ என்.ராஜ், எம்.றொசாந்த்





யாழ்ப்பாணம், காரைநகர் - ஊர்காவற்றுறைக்கு இடையில் நடைபெறும் பாதை சேவையில் பயணிப்போருக்கு, வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் பாதுகாப்பு அங்கிகளை வழங்கியுள்ளனர்.

காரைநகர் - ஊர்காவற்றுறைக்கு இடையில், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இலவசமாக பாதை சேவையை நீண்ட காலமாக நடத்தி வருகின்றனர்.

குறித்த பாதை சேவை ஊடாக உத்தியோகஸ்தர்கள் , ஊர்காவற்றுறை நீதிமன்றம் செல்வோர், மாணவர்கள் என பல தரப்பினரும் சென்று வருகின்றனர்.

சுமார் 500 மீற்றர் தூரமான இந்தப் பாதை சேவை நடைபெறாவிடின், இரண்டு ஊர்களுக்கும் இடையில் பயணிப்போர் யாழ்ப்பாணம் சென்றே செல்ல வேண்டும். அதற்காக அவர்கள் சுமார் 40 கிலோமீற்றர் தூரம் சுற்ற வேண்டிய நிலை ஏற்படும்.

இரண்டு ஊர்களுக்கு இடையிலும் நிரந்தர பாலம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பதற்கு, சுமார் 1,700 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, செய்திகள் வெளியாகி இருந்த போதிலும், பாலம் அமைப்பதற்கான பணிகள் எவையும் ஆரம்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆளுநர் குறிப்பிட்ட

# ‘சிங்களச் சந்தை’ விவகாரமானது

## ஏறாவூர் பொதுச் சந்தை என்றாலே வருவோம்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்





ஏறாவூர் நகர சபைக்குரிய பொதுச் சந்தையை “சிங்களச் சந்தை” எனக் குறிப்பிட்டு, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தால் அனுப்பப்பட்ட கடித விவகாரம் சூடுபிடித்துள்ளது.

இதன் விளைவாக, நகர சபை பொதுச் சந்தை என ஆளுநர் மாற்றிக் கொண்டதாக ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் எம்.எஸ். நழிம் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர சபையின் 44ஆவது சபை அமர்வு, அச்சபையின் சபா மண்டபத்தில் நேற்று (30) நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் மேலும் தெரிவிக்கையில், “ஏறாவூர் சிங்களச் சந்தை விடயமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கிழக்கு மாகாண ஆளுநர், கடந்த வெள்ளிக்கிழமை பெக்ஸ் மூலம் அழைப்புக் கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

“அதனையடுத்து, ஆளுநருடன் தொடர்புகொண்டு ஏறாவூர் பொதுச் சந்தையை நீங்கள் சிங்கள சந்தை எனக் குறிப்பிட்டது தவறு என்றும் அவ்வாறான தலைப்புடன் கூட்டப்படும் கூட்டத்துக்கு நாங்கள் சமுகமளிக்கமுடியாது என்ற விடயமும் ஏறாவூர் நகர சபையின் பொதுச் சந்தை விடயம் என்று அழைத்தால் மாத்திரமே நாங்கள் சமுகமளிப்போம் என்ற விடத்தையும் ஆளுநருக்கு




உறுதிபடத் தெரிவித்தோம்.

“அதன் பின்னர் ஆளுநர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, ஏறாவூர் நகர சபையின் பொதுச் சந்தை என்று தலைப்பிட்டு, கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

“தனக்கு அனுப்பப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில்தான் தான் அவ்வாறு சிங்கள சந்தை எனக் குறிப்பிட்டேன். இதில், வேறெந்த உள்நோக்கமும் இல்லை என்றும் ஆளுநர் எம்மிடம் குறிப்பிட்டார்.

“மேலும், இந்த ஏறாவூர் பொதுச் சந்தை விடயமாக ஆளுநரிடம் சில தவறான விடயங்களை முறைப்பாட்டாளர்களான சிங்கள வியாபாரிகள் தெரிவித்திருக்கின்றார்கள் என்ற விவரமும் தெரியவந்தது.

“ஏறாவூர் நகர சபையின் பொதுச் சந்தையில் சட்டவிரோதமாக அத்துமீறி உள்நுழைந்துள்ள சிங்கள சமூகத்தவர் மூவர் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் ஏறாவூர் நகர சபையால் தொடரப்பட்டுள்ள வழக்கை வாபஸ் பெறுமாறு, ஆளுநர் கேட்டுக் கொண்டார். எனினும், இது நகர சபை எடுக்கக் கூடிய தீர்மானம் என்று ஆளுநரிடம் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளோம்”என்றார்.

சாய்ந்தமருது

# மைதானத்துக்கு மின்னொளி

■ அஸ்லம் எஸ்.மௌலானா



சாய்ந்தமருது பொலிவேரியன் ஐக்கிய பொது விளையாட்டு மைதானத்துக்கு ரஹ்மத் பவுண்டேசனின் ஸ்தாபகத் தலைவரும் கல்முனை மாநகர சபையின் பிரதி மேயருமான ரஹ்மத் மன்சூரின் ஏற்பாட்டில், கோப்ரா எல்.ஈ.டி. மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வேலைத்திட்டம், நேற்று முன்தினம் (29) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இம்மைதானத்தில் பாவனையில் இருந்த மின் விளக்குகள் பழுதடைந்து, இருள் சூழ்ந்து காணப்பட்டிருந்த நிலையில், சாய்ந்தமருது கிரிக்கெட் சபையின் கோரிக்கையின் பேரில், ரஹ்மத் மன்சூர் குறுகிய காலத்தில் இம்மைதானத்துக்கு மின்னொளியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

சீலாமுனை வீட்டில்

# எரிகாயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

■ வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீலாமுனை பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து எரிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம், நேற்று (30) மீட்கப்பட்டுள்ளது.

சீலாமுனை, ஆனந்தன் வீதியிலிருந்த வீட்டில் தனிமையிலிருந்த தி.சத்தியராஜன் என்னும் 69 வயது நபரே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மண்ணெண்ணை ஊற்றப்பட்டு, தீயிட்டு குறித்த நபர் எரிந்துள்ளதாக ஆரம்பக்கப்பட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

> குற்றத்தடவியல் பிரிவு பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த வருகின்றனர்

குறித்த நபருக்கு அருகில் கடிதம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் அவர் தற்கொலைசெய்துகொண்டாரா என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகைதந்த மாவட்ட குற்றத்தடவியல் பிரிவு பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த வருகின்றனர்.

களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் பிரேதத்தைப் பார்வையிட்டதுடன், விசாரணைகளை முன்னெடுத்து, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு பிரேதத்தை கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நிந்தவூரில்

# புதிய பொலிஸ் நிலையம்

■ பாறுக் ஷிஹான்




அம்பாறை, நிந்தவூர் பிரதேசத்தில் புதிய பொலிஸ் நிலையம், வைபவ ரீதியாக நேற்று முன்தினம் (29) திறந்து வைக்கப்பட்டது.


நிந்தவூரில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் டி.எம்.எஸ்.கே.திஸாநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி கமல் சில்வா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, புதிய பொலிஸ் நிலையத்தை திறந்து வைத்தார்.


இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம். வை.செனவிரத்ன, அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம். டி.ஜெயந்த ரத்னாயக்க, கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம். எல். புத்திக, உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இலங்கை வந்துள்ள

# ஆன்மீகத் தலைவருக்கு கல்முனையில் வரவேற்பு

■ ஏ.எல்.எம்.ஷினாஸ்





இலங்கை அரசாங்கத்தின் விசேட விருந்தினராக வருகை தந்திருகின்ற அருஸீய்யத்துல் காதிரிய்யாவின் சர்வதேச ஆன்மீக அமைப்பின் தலைவர், டொக்டர் அஹ்மத் நாஸிரை வரவேற்கும் நிகழ்வு, கல்முனை மாநகரத்தில் நேற்று முன்தினம் (29) நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் டொக்டர் எஸ்.எம்.ஏ.அஸீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆன்மீகத் தலைவருடன் வருகைதந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முஸ்லிம் சமய பண்பாடு மற்றும் கலாசார விவகாரங்களுக்குப் பொறுப்பான இணைப்பாளர் கலாநிதி ஹஸன் மௌலானாவுக்கும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்கா சரீப் பள்ளிவாசலுக்கு வருகை தந்த ஆன்மீகத் தலைவர் விசேட பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

பின்னர் கல்முனை பிரதான நகர் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட ஆன்மீகத் தலைவர், முஹைதீன் பெரிய ஜும்ஆ பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தார். இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மஜ்லிஸிலும் கலந்துகொண்டார்.

அத்தோடு, கல்முனை முஹைதீன் ஜும்மா பெரிய பள்ளிவாசல் மற்றும் கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளி நாகூர் ஆண்டகை தர்கா பள்ளிவாசல் ஆகியவற்றின் சார்பாக ஆன்மீக தலைவருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கோதுமை மா விலை அதிகரிப்பு

# பெரும் சுமை

## செந்தில் கவலை: மானியமும் கேட்கிறார்

கோதுமை மா விலை 17 ரூபாய் 50 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது மக்களை மேலும் பொருளாதார சுமைக்குள் தள்ளியுள்ளது எனத் தெரிவித்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் செந்தில் தொண்டமான், கோதுமை மாவினை அரசாங்கம் கொள்வனவு செய்து மக்களுக்கு குறைந்த விலையில் விநியோகிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

கோதுமை மா விலை அதிகரிக்கப்பட்டமையானது பாமர மக்களை கடுமையாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது எனத் தெரிவித்துள்ள அவர்,

கோதுமை மா விலை அதிகரிக்கப்பட்டுள்ளமை சாதாரண பாரமர மக்களை நிலைகுலையச் செய்துள்ளது. அவர்களுக்கு இந்த விலை அதிகரிப்பை ஒருபோதும் எதிர்கொள்ள முடியாது என்றார்.

அத்தியாவசியப் பொருட்கள் உட்பட மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில் கோதுமை மா விலை அதிகரிப்பு மக்களை மேலும் பொருளாதார நெருக்கடிக்கு தள்ளியுள்ளதுடன், பெருந்தோட்ட மக்களின் வாழ்விலும் அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்கள் தங்களது நாளாந்த உணவின் பெரும் பகுதியினை கோதுமை மாவின் மூலமே பூர்த்தி செய்து வருகின்றனர்.

இந்நிலையில், இவ்வாறான சூழ்நிலையில் இவர்கள் தற்போது அதிகரிக்கப்பட்ட மாவின் விலை காரணமாக, மென்மேலும் பொருளாதார சுமைக்கு தள்ளப்படுவதுடன், பொருட்களின் விலை அதிகரிப்பு ஈடுகொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை இம்மக்களின் வாழ்வியலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொருட்களின் விலை அதிகரிப்பு ஈடுகொடுக்க முடியாத சூழலில் கோதுமை மாவின் விலை அதிகரிப்பு மேலும் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு கோதுமை மா உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பானது மக்களை பெரும் சுமையோடு அன்றாட வாழ்க்கையை வாழவேண்டிய நிலைப்பாட்டுக்கு உள்ளாக்கியுள்ளது.

ஆகவே, இந்த விலை அதிகரிப்பை உடனடியாக குறைக்க கோதுமை மாவினை அரசாங்கம் கொள்வனவு செய்து மக்களுக்கு குறைந்த விலையில் விநியோகம் செய்ய வேண்டுமென செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.





அக்கரபத்தனையில் புதிய

## ஆடைத்தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டது

■ பா.பாலேந்திரன்

தோட்ட உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலில், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதுபாண்டி ராமேஸ்வரனின் ஆலோசனையின் கீழ், அக்கரபத்தனையில் புதிய ஆடைத் தொழிற்சாலையொன்று திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட ஆடைத்தொழிற்சாலை மூலம், குறித்த பிரதேசத்திலுள்ள 40 இளைஞர், யுவதிகள் தொழில்வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

கடமை முடிந்து வீது திரும்பிய பொலிஸ் சார்ஜன்

## காணாமல் போயுள்ளார்

■ சேஹ்ன் செனவிரத்ன

நல்லதண்ணி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சார்ஜன் ஒருவர், தனது கடமைகளை முடித்துக்கொண்டு, கெலிஓயா பிரதேசத்திலுள்ள தனது வீட்டுக்கு வரும் வழியில் காணாமல் போயுள்ளமை தொடர்பில் பேராதனை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த பொலிஸ் சார்ஜன்ட் கடமை முடிந்து நேற்று முன்தினம் (29) வீடு திரும்பிக்கொண்டிருக்கையில், மழை பெய்வதால் வீட்டுக்கு வருவதற்கு தாமதமாகும் என்று அலைபேசி மூலம் வீட்டாருக்கு தெரியபடுத்தியவுடன் அலைபேசி தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அவருடன் தொடர்புகொள்ள வீட்டார் முயற்சித்த போதும் அது பலனளிக்காமையால், பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனவே ,காணாமல் போன இரண்டு பிள்ளைகளின் தந்தையை தேடும் நடவடிக்கையை பேராதனை பொலிஸார் முன்னெடுத்துள்ளதுடன், இராணுவத்தினரின் உதவியுடன் கெலிஓயா- மகாவலி கங்கைப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது மகாவலி கங்கையிலிருந்து காணாமல் போனவரின் பயணப்பை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், காணாமல் போனவரைத் தேடும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.







## கல்விக்கு கரம் கொடுப்போம்

கல்விக்கு கரம் கொடுப்போம் செயற்திட்டத்தின் கீழ், இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் ஊடாக, இரத்தினபுரி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேச பாடசாலையான, இத்தகந்த- இலங்காபேரிய தமிழ் வித்தியாலத்திற்கு வெண்பலகைகள், பிளாஸ்டிக் கதிரைகள் போன்றன வழங்கப்பட்டன. (பி.கேதீஸ்)



பிரதேசசெயலகங்கள் அதிகரிப்பானது

## உதவி அல்லது பிரதான காரியாலயங்களாக அமையவேண்டும்

■ எஸ்.சதீஸ்நு

நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் அதிகரிப்பானது உதவி காரியாலயங்களாக அல்லது பிரதான காரியாலயங்களாக அமையவேண்டும் என முன்னாள் நுவரெலியா மாவட்ட பராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலாளர் அலுவலகத்துக்கு நேற்று முன்தினம் (29) விஜயம் செய்த அவர், மாவட்ட செயலாளரை சந்தித்து மனுஒன்றையும் கையளித்தார். பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

நுவரெலியா மாவட்டத்தில் அதிகரிக்கப்பட உள்ள பிரதேசசெயலகங்கள் குறித்தும் அதிகரிக்கப்பட வேண்டிய சமுர்த்தி வங்கிகள் குறித்தும் எமது அரங்கத்தின் சார்பில் மகஜர் ஒன்றினை கையளித்தோம் என்றார்.

குறிப்பாக பிரதேச செயலகங்கள் அதிகரிப்பு என்பது கடந்த பத்து வருடங்களுக்கு மேல் பேசப்பட்ட விடயமாகும். 2016ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் பிரேரணை முன்வைத்து, அதற்கு பிறகு அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்து, 2019ஆம் ஆண்டு வர்த்தமானியும் வெளியிடப்பட்டது.

இருந்தபோதிலும் நடைமுறைபடுத்தபடாமல் இருக்கின்ற இந்த முறைமை தொடர்பில், மாவட்ட செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளோம் என்றார்.

பதுளை, எம்பிலிபிட்டியிலும்

## காஸ் அடுப்பு வெடித்து சிதறியது

■ எம். செல்வராஜா, அஜித்லால் சாந்தஉதய

எம்பிலிபிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்துருகஸார பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையமொன்றின் பின்புறமிருந்த வீட்டிலிருந்த சமையல் எரிவாயு அடுப்பொன்று நேற்றுமுன்தினம் (29) மாலை வெடித்துச் சிதறிதாக எம்பிலிபிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால் எவ்வித உயிராபத்துகளும் ஏற்படவில்லைஎன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

“பாரிய சத்தத்துடன் அடுப்பு வெடித்த நிலையில், குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் விரைவாக சமையலறைக்குச் சென்று, சிலிண்டரிலிருந்து எரிவாயு கசிவதை நிறுத்தியுள்ளார். இதனால் ஆபத்தொன்று தவிர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பதுளை- தொடங்வத்த பகுதியில் உள்ள வீடொன்றின் சமையல் எரிவாயு அடுப்பும் வெடித்து சிதறியுள்ளது. சமைத்துக்கொண்டிருந்த போதே, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், இதன்போது எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரம் முறிந்து விழுந்தமையால்

## டயகம வைத்தியசாலையின் பிரசவ விடுதி சேதமடைந்தது

■ துவாரகஷான்

டயகம பிரதேச வைத்தியசாலையின் மீது பாரிய மரமொன்று முறிந்து விழுந்ததால், வைத்தியசாலை கட்டடத் தொகுதி சேதமாகியுள்ளதுடன் பிரசவ விடுதியும் முற்றாக சேதமாகியது.

இதனால் வைத்தியசாலையின் நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (29) மாலை இச்சம்பவம் இடம்பெற்றதுடன், இதன்போது மின்சார துண்டிப்பும் ஏற்பட்டது.

வைத்தியசாலைக்கு பின்புறத்தில் இருந்த மரமொன்று, டயகம வெஸ்ட் தோட்ட நிர்வாகத்தால் வெட்ட முற்பட்ட போதே, இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இதனால் எவ்வித உயிர்ச் சேதங்களும் காயங்களும் எவருக்கும் ஏற்படவில்லை என தெரிவித்துள்ள குறித்த வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி, வைத்தியசாலை கட்டடம் சேதம் அடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.



“ வெட்ட முற்பட்ட போதே, இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் எவ்வித உயிர்ச் சேதங்களும் காயங்களும் எவருக்கும் ஏற்படவில்லை

அன்றாட செயற்பாடுகளை இலகுவாக்க

## வள்ளங்கள் வழங்கி வைக்கப்பட்டன

■ என்.ஆராச்சி

சப்ரகமுவ மாகாண சிறுவர் பராமரிப்பு, பாதுகாப்பு, சமூக சேவை அமைச்சால் வழங்கப்பட்ட வள்ளங்கள், யட்டியாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின் தொடங்கஸ்தென்ன கிராம அபிவிருத்தி குழுவிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.

கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ராஜிகா விக்ரமசிங்க தலைமையில், பிரதேச செயலக வளாகத்தில் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

களனி கங்கையின் கிளை ஆறான கெட்டலபத் ஓயா ஊடாக மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக குறித்த வள்ளங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பால்

## பெருந்தோட்ட பெரிதும் மக்கள் பாதிப்பு

■ எஸ்.கணேசன்

கோதுமை மாவின் விலை திடீரென அதிகரித்ததால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

தோட்டத் தொழிலாளி ஒருவரின் வீட்டில் ஒரு நாளைக்கு 3 அல்லது 5 கிலோ கிராம் வரை கோதுமை மாவை உணவுத் தேவைக்காகப் பயன்படுத்தும் நிலையில், 17 ரூபாய் 50 சதத்தால் கோதுமை மாவின் விலை அதிகரிப்பானது, ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

இரண்டுவேளைக்கும் கோதுமை மாவினால் தயாரிக்கப்பட்ட உணவையே உண்பதாகவும், பிரதேசத்தில் நிலவும் சீரற்ற வானிலை மற்றும் கூதலுக்கு, கோதுமை மாவிலான உணவே ஓரளவுக்கு தாக்குப் பிடிக்கும் என்றும் அம்மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையில், தோட்ட நிர்வாகத்தால் வாரத்தில் 3 நாட்கள் அல்லது 4 நாட்கள் மாத்திரமே வேலை வழங்குகின்றனர். இதன்காரணமாக தாம்,பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

தொழிலாளர்களின் பொருளாதாரத்தை நலன் கருதி, கோதுமை மாவை மானிய விலையில் வழங்குவதற்கும், நிவாரணம் வழங்குவதற்கும், பொருட்களின் விலைவாசியை அதிகரிக்காமல் இருப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். உடற்சோர்வு இன்றி உழைக்கவேண்டுமாயின் சத்தான உணவுகளை உண்ணவேண்டும். அதற்கு வழிசமைத்து கொடுக்கும் வகையில், பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

பொடி மெனிகேவை நிரப்பிய

## வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்

■ பாலித ஆரியவன்ஸ

கொரோனா தொற்றால் பல மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த கொழும்பு- பதுளைக்கான ரயில் சேவைகள், மீண்டும் நேற்று முன்தினத்திலிருந்து (29) ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பிலிருந்து பதுளைக்கு முதலாவதாக சென்ற ரயிலில், அதிகளவான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பயணித்துள்ளனர்.

இதில் சுமார் 100 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எல்ல பிரதேசத்துக்கு வருகைதந்துள்ளனர்.



# அடிமையாக வாழவைக்கத் துடிக்கும் இரும்பு சப்பாத்துக்கள்

வடக்கு,கிழக்கை நோக்குமிடத்து ஒவ்வொரு நாளும் ஏதோவோர் உரிமைக்காக குரல்கொடுத்துப் போராட்டம் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஒட்டு மொத்தமாக கூறவேண்டுமாயின், போராட்டமே வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்கையில் பின்னிப்பிணைந்துகொண்டுள்ளது.

இறுதி யுத்தத்தின் போது, தங்கள் கண்களின் முன்பாக ஒப்படைக்கப்பட்ட உறவினர்களைத் தேடி, ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. பூர்வீக நிலைங்களையும், காணிகளையும் பாதுகாத்துக்கொள்வதற்காக புலரும் ஒவ்வொரு பொழுதும் போராவேண்டியிருக்கின்றது.

ஆட்சியிலிருக்கும் அரசாங்கம், சிறுபான்மையினரை அடக்குமுறைக்குள் வைத்திருக்கவே விரும்புகின்றது என்பது எடுக்கப்படும் ஒவ்வொரு தீர்மானங்களிலும் தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது. "ஒரே நாடு, ஒரே சட்டம்" எனும் செயலணியில், தமிழர்கள் எவரும் முதலில் நியமிக்கப்படவில்லை. அரசாங்கத்துக்குள் இருப்போர் கொடுத்த அழுத்தங்களால் பின்நாளில் மூவர் நியமிக்கப்பட்டனர்.

தொல்பொருள் ஆராய்ச்சி எனும் போர்வைக்குள் நுழைந்து வடக்கு,கிழக்கில் தமிழர்கள் நிஜபூமி அபகரிக்கப்படும் செயல்கள் இன்னுமே இருக்கத்தான் செய்கின்றன. அவ்வாறான அடத்தான சம்பவங்களை முழுமையாக நிறுத்துவதற்கு ஆளும் தரப்பில் இருக்கும் சிறுபான்மை பிரதிநிதிகளின் குரல் மேலோங்கி இருக்கவில்லை என உறுதியாகக் கூறமுடியும்.

உரிமைகளை அப்பட்டமாக அபகரித்து, அடக்கியாள நினைக்கும் ஆதிக்க அரசாங்கத்தின் செயற்பாடுகளை எதிர்க்கும் செயற்பாடுகள், யாழ்ப்பாணம் மாதகல்லில் கடந்த இரண்டு நாட்களாக இடம்பெற்றுவருகின்றமை கண்கூடு. உயிர்களை இழந்து, உரிமைகளையும் இழந்து உடைமைகளையும் இழந்து சுயமரியாதையற்று அடிமையாகவே வாழவேண்டும் எனும் நோக்கம், இந்த அரசாங்கத்திடம் இருக்கிறது.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையிலும் சனத்தொகையை விடவும், படையினரின் எண்ணிக்கை அதிகமாகுமென்ற குற்றச்சாட்டுக்கள் இன்னுமே இருக்கத்தான் செய்கின்றன. படையினரும் அவ்வப்போது அதனை நிரூபித்துவிடுகின்றனர்.

மாதகல்லுக்கு கொட்டன்களுடன் சென்றிருந்த கடற்படையினர், மக்களின் நியாயமான போராட்டத்தை இரும்புக் கரங்கொண்டு அடக்கமுயற்சித்தனர். எனினும், உரிமைப்போராட்டம் வெற்றிக்கண்டுவிட்டது. மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் ஓரணியில் திரண்டிருந்து எதிர்ப்பை காண்பித்தமையால், தனியார் காணியை அடத்தாக பிடித்துக்கொள்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி கைகூடவில்லை.

ஆனால், அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டு காவடியெடுக்கும் தமிழ் பிரதிநிதிகள், இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உரிமைக்குரல் கொடுக்கவில்லை என்பதை நினைக்கும்போது, "மக்கள் பிரதிநிதிகள்" என்பதற்கு அர்த்தமே தெரியாமற் போய்விடுகின்றது.

பல்லினங்கள் வாழும் நாட்டில், ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள், மற்றோர் இனக்குழுமைத்தை அடிமையாக நடத்துவதற்கோ, வாழவைப்பதற்கோ முயற்சிக்கக்கூடாது. அவை, இனங்களுக்கு இடையிலான விரிசல்களை இன்னுமின்னும் விரிவடையச் செய்துவிடும்.

பூர்வீக காணிகளை அபகரிப்பது மட்டுமன்றி, இனப்பரம்பலை சீர்குலைக்கும் செயற்பாடுகளும் நிறுத்தப்படவேண்டும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

ஒருவர் தனது சுயநலத்துக்காக ஒருவரிடம் உதவி கேட்பதற்காக அவரை அணுகிக் கண்டபடி புகழ்ந்தால், அதைக் கேட்ட நபர், அதை உண்மை என நம்பினால், அவர் தனது உண்மை நிலையை உணராதவரகின்றார்.

பொய்களை நம்பினால், கேட்பவர் திறமை மங்கிவிடும். பத்துப்பேர் போலியான விடயங்களைச் சொன்னால், அதை நம்புபவர்கள் அப்பாவிகளாகவும் உலகம் தெரியாதவர்களாகவும் இருப்பார்கள்.

கெட்டிக்காரர்களையும் முட்டாள்களாக்க சிலர் பொய் புளுகுகளைப் பிரயோகிப்பதுண்டு. இத்தகைய பாவச் செயல் அவர்களைத் திரும்பத் தாக்கும். ஏமாற்றி வாழும் கூட்டம் இருக்கின்றது. அடிக்கடி தவறு செய்வது, கடவுளை ஏமாற்ற எண்ணுவதாகும். தவறுகளைத் தொடர்ந்து செய்பவர்கள் நிம்மதியாக வாழமுடியாது.

காலம் சும்மா சுழல்வதில்லை. நல்ல மனிதர்களுக்கு நம்மைகளையும் தகாத செயலைச் செய்பவர்களுக்கு தகுந்த தண்டனைகளையும் வழங்கி வருகின்றது. மரணத்திலும் வாழ்பவர்கள் ஒழுக்கசீலர்களே!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இது போன்றதொரு காலம் இருந்ததுண்டா?



எம்.எஸ்.எம். ஐயூப்

நாடு, சகல துறைகளிலும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி இருக்கிறது. எந்தவொரு நெருக்கடியும் அண்மைக் காலத்தில் தீர்வது ஒரு புறமிருக்க, இனி எப்போதாவது தீருமா என்று சிந்திக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டு உள்ளனர்.

கோட்டாபய ராஜபக்ஷ திறமையானவர்; அறிவுள்ளவர், புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்தவர்; நாட்டில் ஒழுங்கை நிலைநாட்டக் கூடியவர் என்றெல்லாம் கூறியே, ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அவரை 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தியது.

ஆயினும், இப்போது எல்லாம் தலை கீழாகவே நடைபெறுகிறது. திறமையையும் காணவில்லை; ஒழுங்கையையும் காணவில்லை; அறிவையும் காணவில்லை. அத்தியாவசிய பொருட்களின் விலை வானளாவ உயர்கிறது.

அது குறைவது ஒரு புறமிருக்க, இன்றோ அல்லது நாளையோ உயர்வதை நிறுத்திக் கொள்ளும் என்பதற்கு, எந்தவோர் உத்தரவாதமும் இல்லை. கண் முன்னே ஊழல்கள் இடம் பெறுகின்றன. அனர்த்தமும் சிலருக்கு ஆசீர்வாதமாகிறது.

அரிசி, மரக்கறி வகைகள் போன்ற ஒரு சில பொருட்கள் மட்டுமே, நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. ஏனைய சகல பொருட்களும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இப்போது, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வந்த பொருட்கள் உள்ளிட்ட சகல பொருட்களினது விலைகளும் உயரும் நிலை உருவாகியுள்ளது.

பிரதான காரணம், நாட்டில் வெளிநாட்டு செலாவணிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையாகும். அத்தோடு, பொதுத் தேர்தலில் வெற்றி பெறும் நோக்கத்துடன், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றவுடன் பெருமளவில் வரிச் சலுகைகளை வழங்கினார். அதன் மூலம் வருடமொன்றுக்கு திறைசேரி சுமார் 65,000 கோடி ரூபாயை இழப்பதாகக் கூறப்படுகிறது.

நாட்டுக்கு டொலர் சம்பாதித்துத் தந்த சகல துறைகளும், கொவிட்- 19 தொற்றின் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. சுற்றுலாத்துறை அதில் முக்கியமானதொரு துறையாகும். இரண்டு வருடங்களுக்கு முன்னர், வருடமொன்றுக்கு 20 இலட்சம் உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வந்த போதிலும், இந்த வருடம் ஒரு இலட்சம் பிரயாணிகளே வந்துள்ளனர்.

வெளிநாடுகளில் தொழில் செய்தவர்களில் பெரும்பாலானோர் நாடு திரும்பியுள்ளனர். அவர்களிலும் மிகச் சிலரே மீண்டும் அத்தொழில்களுக்குச் செல்லத் தயாராக இருக்கிறார்கள்.

வெளிநாட்டு செலாவணியைத் தேடித் தந்த துறைகளில், ஆடை உற்பத்தித்துறை ஓரளவுக்குத் தப்பிப் பிழத்துள்ளது. ஆனால், அவற்றின் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களுக்கு பெருமளவு வெளிநாட்டு செலாவணி செலவிட வேண்டியுள்ளது. அரசாங்கத்தின் அடக்குமுறை கொள்கை காரணமாக, ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான ஜீ.எஸ்.பி பிளஸ் தீர்வை சலுகையை நிறுத்தும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதையும் இழந்தால் வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினை மேலும் மோசமாகும்.

இந்த வெளிநாட்டு செலாவணி தட்டுப்பாட்டின் காரணமாகவே அரசாங்கம் இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதைத் தடை செய்தது. அதனால் உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. இப்போது, அரசாங்கம் மீண்டும் இரசாயன உரம் இறக்குமதிக்கு அனுமதி வழங்கியிருப்பதால், அடுத்த வருடம் இரசாயன உரத்துக்கும் உணவுப் பொருட்களுக்குமாக வெளிநாட்டு செலாவணியை செலவிட வேண்டியுள்ளது. இவ்வாறு ஒரு பயங்கர சிக்கலில் நாடு சிக்கித் தவிப்பதால், விலைவாசிப் பிரச்சினை அண்மைக் காலத்தில் தீரும் என்பதை எதிர்ப்பார்க்க முடியாது.

வெளிநாட்டு செலாவணி மற்றும் கொவிட்-19 தொற்று மட்டும் தான் விலைவாசி உயர்வுக்கு காரணம் என்பதைப் போல் தான், அமைச்சர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆனால், அவை மட்டும் அல்ல, நிர்வாக சீர்கேடும் ஊழலும் அதற்குக் காரணங்களாகும்.

அரிசி விலை அதற்குச் சிறந்த உதாரணமாகும். நாட்டில் போதியளவு அரிசி இருக்கிறது. ஆனால், அரசியல் பின்புலம் உள்ள ஓரிரு வர்த்தகர்களே அதனை சேமித்து வைத்திருக்கின்றனர். அவர்கள் தம் விருப்பப்படி விலையை தீர்மானிக்கிறார்கள். அதனைத் தடுக்கச் சட்டம் இருந்தும் அரசாங்கம் அதனை தடுப்பதில்லை.

பாரியளவிலான ஊழல் என்பது, இப்போது பகிரங்கமாகவே நடைபெறுகிறது. உதாரணமாக, சுமார் 100 ரூபாய், 110 ரூபாயுக்கு ஒரு கிலோ கிராம் சீனி விற்கப்பட்டு வந்த போது, அதன் விலையை 85 ரூபாயாகக் குறைப்போம் எனக் கூறிய அரசாங்கம், கடந்த வருடம் நவம்பர் மாதம் சீனிக்கான இறக்குமதி தீர்வையை கிலோகிராமுக்கு 50 ரூபாயிலிருந்து 25 சதமாகக் குறைத்தது. ஆனால், அந்த வரிச் சலுகைளை பெற்றுக் கொண்ட வர்த்தகர்கள், அரசாங்கம் வர்த்தமானி மூலம் விதித்த 85 ரூபாயுக்கு சீனியை விற்கவில்லை. மாறாக, சீனியின் விலையை அதன் பின்னர் 220 ரூபாயாக அதிகரித்தது.

அரசாங்கம், அதற்கு எதிராக நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை பாவிக்கவில்லை. பின்னர், நாட்டில் பெரும் எதிர்ப்பு எழவே, சீனியின் விலையை வர்த்தகர்கள் 135 ரூபாயாகக் குறைத்தனர். அது இப்போது, மேலும் அதிகரித்துக் கொண்டு போகிறது. அநாவசியமாகத் தீர்வைக் குறைத்ததன் மூலம் மட்டும், அரசாங்கம் 9,000 கோடி ரூபாய் பணத்தை இழந்ததாகக் கூறப்பட்டது. இது, மத்திய வங்கி பிணைமுறி மோசடியைப் பார்கிலும் பாரிதொரு மோசடியாகும்.

அண்மையில், சதோச நிறுவனத்தின் சில அதிகாரிகள், அந்நிறுவனத்தில் இருந்த இரண்டு கொள்கலன் வெள்ளைப்பூடுகளை, புறக்கோட்டையைச் சேர்ந்து இரண்டு வர்த்தகர்களுக்கு கிலோ கிராம் 135 ரூபாய் வீதம் விற்றனர். பின்னர், அதே வெள்ளைப்பூடுகளை கிலோ கிராம் 445 ரூபாய்க்குத் தமது நிறுவனத்துக்காகவே கொள்வனவு செய்தனர். இதனை இரண்டு பத்திரிகைகள் அம்பலப்படுத்தவே, அந்தச் செய்திகளைப் பற்றி (ஊழலைப் பற்றி அல்ல) விசாரிக்க இரகசிய பொலிஸூக்கு வருமாறு, இரண்டு பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் நிருபர்கள் கடந்த ஒக்டோபர் மாதம் பணிக்கப்பட்டடனர். பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலையிட்டு அது தடுக்கப்பட்டது. அரசியல்வாதிகளின் தொடர்பு இல்லாமல், இவ்வாறு பகற்கொள்ளைகள் இடம்பெற முடியுமா என்ற கேள்வி எழுகிறது. இப்போது அதைப் பற்றி எவரும் பேசுவதில்லை.

இரசாயன உரம் இறக்குமதி செய்வதைத் தடைசெய்த அரசாங்கம், சீனாவிலிருந்து சேதனப் பசளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்தது. அந்தப் பசளையில் விஷக்கிருமிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அது தொடர்பான சர்ச்சைக்கு மத்தியில், அரசாங்கம் இந்தியாவிலிருந்து நெனோ நைட்ரஜன் என்ற திரவப் பசளையை இறக்குமதி செய்தது. அதன் விலை ஒரு போத்தல் 2,000 ரூபாய்க்கு அதிகம் என்றும் கூறப்பட்டது.

அதன் மூலம் பாரியதொரு மோசடி இடம்பெற்றுள்ளதாக எதிர்க்கட்சிகள் கூறிய போது, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே, அதனை எதிர்த்து சவால் விடுத்தார். ஆனால், பின்னர் அந்தத் திரவப் பசளை உற்பத்தி செய்யும் நிறுவனததின் அதிகாரிகள், இலங்கைக்கு வந்த போது தமது பசளையின் விலையையும் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தனர். அதன்படி அதன் ஒரு போத்தல் 500 ரூபாயாகவே இருந்தது. அதாவது அமைச்சர்களும் அதிகாரிகளும் விலையை நான்கு மடங்காக அதிகரித்தே காட்டியுள்ளனர். இப்போது தாம் இதில் சம்பந்தப்படவில்லை என அளுத்கமகே கூறுகிறார்.

சீனாவிலிருந்து சேதனப் பசளை இறக்குமதி செய்த முறையின் காரணமாகவும் அரசாங்க அதிகாரிகள் மற்றொரு பிரச்சினையை உருவாக்கியுள்ளனர். அவர்கள் அந்தப் பசளையை, இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தாமலேயே அதற்கான ஒப்பந்தத்தை குறிப்பிட்ட பசளைக் கம்பனியுடன் செய்து கொண்டனர். அதற்கான பணத்தை செலுத்துவதற்காக மக்கள் வங்கியில் கடன் பத்திரத்தையும் திறந்தனர். பின்னர், பசளையின் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்ட போது அதில் விஷக்கிருமிகள் இருப்பது தெரிய வந்தது.

இப்போது, சீன நிறுவனம் அதற்கான பணத்தை கேட்கிறது. ஒப்பந்தம் செய்து கொண்டால் அதன் படி கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் ஏதாவது மாற்றங்களைச் செய்து கொள்ள முயல்வதேயல்லாது, நாம் முன்னரே இரசாயன பரிசோதனைகளை மேற்கொள்ளவில்லை என்று இப்போது கூற முடியாது. வழக்கொன்றை காரணம் காட்டி, பணத்தை வழங்க மறுத்த மக்கள் வங்கியை சீனக் கம்பனி கறுப்புப் பட்டியலில் சேர்த்தது. பசளையை ஏற்றி வந்த கப்பலும் நாட்டை சுற்றி வலம் வருகிறது.

இந்த நிலையில், ஜனாதிபதி அண்மையில் சிறந்ததோர் அரசியல் பாடத்தை மக்களுக்கு கற்றுக் கொடுத்தார். "எம்மை வெளியேற்ற வேண்டும் என்று நினைத்தால், நீங்கள் எமக்கு முன்னர் வெளியேற்றியவர்களை மீண்டும் அழைக்காதீர்கள்" என அவர் கூறினார்.

உண்மைத் தான். ஆனால் ராஜபக்ஷர்களும் முன்னைய ஆட்சியில் பதவியில் இருந் வெளியேற்றப்பட்டவர்களேயாவர். ஜனாதிபதியின் ஆலோசனையை மக்கள் 2019 ஆம் ஆண்டும் கடந்த வருடமும் பின்பற்றி இருந்தால், கோட்டாபய ஜனாதிபரியவதோ ஶ்ரீ லங்கா பொதுஜன முபெரமுன நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறுவதோ சாத்தியமாகி இருக்கமுடியாது.

சுதந்திரம் பெற்றது முதல், மக்கள் முன்னர் விரட்டியவர்களையே ஒவ்வொரு தேர்தலிலும் மீண்டும் பதவியில் அமர்த்தி இருக்கிறார்கள். எனவே, ஜனாதிபதியின் ஆலோசனை சரியானதே. அந்த ஆலோசனையோடு மற்றொரு விடயத்தையும் மக்கள் கருத்திற் கொள்ள வேண்டும். வெறுமனே வாக்குறுதிகளை நம்பியோ இனத்தை மதத்தைப் பார்த்தோ அரசியல்வாதிகளுக்கு வாக்களிக்காமல், அவர்களிடம் நாட்டைக் கட்டி எழுப்ப ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்ப்பதும் மக்களின் கடமையாகும்.

திறந்த மனதுடன் அரசியல்வாதிகளையும் அரசியல் கட்சிகளையும் பார்க்க மக்கள், குறிப்பாக படித்த இளைஞர்கள் தம்மை அரசியல் ரீதியாக வளர்த்துக் கொள்ளாத வரை நாடு முன்னேறாது.

## கடிதங்கள்

### வீதிகள் சமிஞ்சைகள், பாதசாரி கடவையின்றி மாணவர்களுக்கு உயிராபத்து

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட நற்பிட்டிமுனை கிட்டங்கியை இணைக்கும் பிரதான வீதியின் இரு மருங்கிலும், விழிப்பூட்டும் சமிஞ்சைகள், பாதசாரி கடவைகள் இன்மையால், வீதியில் பயணம் செய்யும் மாணவர்கள், பொதுமக்கள் பெரும் சிரமங்களையும் உயிராபத்துகளையும் எதிர்கொண்டுள்ளனர்.

நற்பிட்டிமுனை அல் அக்ஸா பாடசாலை, லாபீர் வித்தியாலயம் தனியார் கல்வி நிறுவனம் ஆகியவற்றுக்குச் செல்கின்ற மாணவர்கள், பிரதான வீதியை கடக்கின்ற போது ஆபத்துகளை எதிர்கொள்கின்றனர். இவ்விடயம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்துடன் கிட்டங்கி □ நற்பிட்டிமுனை வீதி அடையாளங்கள், சமிக்கைகள் போன்றனவும் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன.

மேலும், வீதியின் இருமருங்கிலும் உள்ள வடிகான்களுக்கு மேலாக இடப்படும் கொங்கிரீட் மூடிகள், முறையாக போடப்படாமையால் விபத்துகளும் அடிக்கடி ஏற்படுகின்றன. எனவே இப்பிரதேசத்தில் அதிகரித்துள்ள விபத்துக்கள் வாகனங்கள் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் முகமாகவும் பாதசாரிகளின் நலன் கருதி, உரிய வீதி சமிக்கைகள், பாதசாரி கடவைகளை நிர்மாணிப்பதற்கு உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பாறுக் ஷிஹான்



புதுடெல்லி

எதிர்க்கட்சிகள் அமளி:

# 2வது நாளாக லோக்சபா ஒத்திவைப்பு

எதிர்க்கட்சியினர் அமளியால் பாராளுமன்ற இரு அவைகளும் இரண்டாவது நாளாக நேற்றும் ஒத்தி வைக்கப்பட்டது. இதனால் காரியாலய பணிகள் ஏதுவும் நடக்கவில்லை.

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் (29) ஆரம்பமாகியது. முதல் நாள் அவை ஆரம்பமாகியதும், வேளாண் சட்ட இரத்து சம்டமூலம் தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பாக



விவாதம் நடத்த வேண்டும் என எதிர்க்கட்சி வலியுறுத்தியது. ஆனால், சபாநாயகர் அனுமதி அளிக்கவில்லை. தொடர்ந்து சட்டமூலம் குரல் வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதாக அறிவிப்புச் செய்யப்பட்டது. இதனால் எதிர்க்கட்சியினர் கோஷங்களை எழுப்பினர். அமளியால் அவை ஒத்தி வைக்கப்பட்டது. இதுபோல் ராஜ்யசபாவும் ஒத்தி வைக்கப்பட்டது.

கடந்த கூட்டத்தில் சபாநாயகர் இருக்கை அருகே சென்று கோஷங்கள் எழுப்பியதுடன் பெண் காவலர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டதாக 12 எம்.பிக்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டனர். இந்த இடைநிறுத்தத்தை திரும்பப் பெற வேண்டும் என நேற்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர். ஆனால், இதனை ஏற்க முடியாது என அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து அமளி நிலவியதால் நேற்று இரு அவைகளும் ஒத்தி வைக்கப்பட்டன. வெளியே வந்த எம்பிக்கள் பாராளுமன்ற வளாகம் காந்தி சிலை அருகே ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

திருச்சி

சுடுகாடு ஆக்கிரமிப்பை தட்டிக் கேட்டதால்

## ரியல் எஸ்டேட் தொழிலதிபர் கொலை

திருச்சி அருகே, ரியல் எஸ்டேட் தொழிலதிபர் கொலை வழக்கில், திராவிட முன்னேற்ற கழக ஒன்றிய செயலாளர், தொழிலதிபர் தலைமறைவாகியுள்ளனர்.

திருச்சி மாவட்டம், சோமரசம்பேட்டை அருகேயுள்ள செங்கதிர்சோலையைச் சேர்ந்தவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார்.

வீட்டின் முன் இருந்தவரை, அதே பகுதியைச் சேர்ந்த இருவர் தேடி வந்து, கட்டையால் தாக்கிவிட்டு தப்பியோடினர். மருத்துவமனைக்கு செல்லும் வழியில் தொழிலதிபர் உயிரிழந்தார்.

இவரின் மனைவி அளித்த புகாரில், "சுடுகாடு ஆக்கிரமிப்பை தட்டிக் கேட்டதால், அந்தநல்லூர் தி.மு.க ஒன்றிய செயலர் கதிர்வேல், வாசன் ரியல் எஸ்டேட் நிறுவன அதிபர் ரவி முருகையா ஆகியோரின் தூண்டுதலில், இருவர் என் கணவரை அடித்து கொலை செய்து விட்டனர்" என தெரிவித்திருந்தார்.

பொலிஸார் வழக்கு பதிவு செய்து, இருவரையும் கைது செய்தனர். தலைமறைவாகிவிட்ட மேலும் இருவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இவர்களை கைது செய்யா விட்டால், உடலை வாங்க மாட்டோம் என, நேற்று மதியம் திருச்சி மாவட்ட அரசு மருத்துவமனை முன், உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். பொலிஸார் சமாதானப்படுத்தியும் உடலை வாங்க மறுத்து விட்டனர்.

சென்னை

நாடார் சமூகத்தை இழிவாகப் பேசிய

## பெண் மதபோதகர் கைது

நாடார் சமூகத்தை இழிவாகப் பேசியதாக பெண் மதபோதகரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சென்னை, குன்றத்தூரில் சில நாள்களுக்கு முன் தேவாலயத்தில் நடந்த கூட்டத்தில் பெண் மதபோதகரொருவர் நாடார் சமூகத்தினர்



குறித்து இழிவாகப் பேசியதாக குற்றம் சாட்டப்பட்டது. அவரை கைது செய்ய வலியுறுத்தி, நாடார் சமுதாயத்தினர் சார்பில் குன்றத்தூர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இதுதொடர்பாக பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன.

இந்நிலையில் சோமங்கலத்தில் இருந்த மதபோதகரை குன்றத்தூர் பொலிஸார் கைது செய்து விசாரித்துவருகின்றனர்.

சென்னை

## பன்னீர்செல்வம் சென்ற விமானத்தில் பயணியொருவர் இறந்து காணப்பட்டார்

அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம் பயணம் செய்த ஏர்இந்தியா விமானத்தில், மதுரையைச் சேர்ந்த பயணி, இறந்து கிடந்தது, விமானத்துக்குள் பெரும் அதிர்ச்சியில் ஏற்படுத்தியுள்ளது. இந்த விமானம் சென்னை வந்தடைந்தது.

மதுரையிலிருந்து சென்னை வழியாக மும்பை செல்லும் ஏர்இந்தியா விமானம், நேற்றுமுன்தினம் பிற்பகல் சென்னை வந்தது. விமானத்தில், அ.தி.மு.க, ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம் உட்பட 93 பயணியர் இருந்தனர். விமானம் சென்னையில் தரையிறங்கியதும், பயணியர் இறங்கினர். ஆனால், சண்முகசுந்தரம், 72, என்ற மதுரையைச் சேர்ந்த பயணி, இருக்கையில் சாய்ந்த நிலையில், சுயநினைவின்றி இருந்தார். இதையடுத்து, அவரை விமான நிலைய மருத்துவ குழுவினர் பரிசோதித்த போது, ஏற்கெனவே இறந்தது தெரியவந்தது.

அவரது உடலை, சென்னை விமான நிலைய பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக, குரோம்பேட்டை அரசாங்க மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்தச் சம்பவத்தால், சென்னையிலிருந்து ஏர்இந்தியா விமானம், இரண்டு மணி நேரம் தாமதமாக புறப்பட்டது. சென்னையில் வசிக்கும் மகளை பார்ப்பதற்காக, சண்முக சுந்தரம் வந்தது தெரியவந்தது.

புதுடெல்லி

## திருமணத் தம்பதிகளுக்கு பரிசு

### இந்தியன் எண்ணெய் நிறுவனம் அறிவிப்பு




'மணமக்களுக்கு பெற்றோல் மற்றும் டீசலுக்கான எரிபொருள் கூப்பன்களைப் பரிசாக வழங்குங்கள்' என, இந்தியன் எண்ணெய் நிறுவனம் அறிவித்துள்ளது.

பொதுத் துறை நிறுவனமான இந்தியன் எண்ணெய் நிறுவனம் சார்பில் 'ஒன் பார் யு' என, அழைக்கப்படும் பரிசு திட்டம் தீபாவளிக்கு அறிமுகமானது. இதன்படி பெற்றோல் மற்றும் டீசல் நிரப்பிக்கொள்ளும் எரிபொருள் கூப்பனை, நண்பர்களுக்கு தீபாவளி பரிசாக வழங்கும் முறை ஆரம்பித்துள்ளது. இந்தக் கூப்பன், குறைந்த பட்சம் 500 முதல், அதிகபட்சம் 10 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கிறது.

இத்திட்டம் மக்களிடம் முழுமையாகச் சென்றடைய தற்போது புதிய வழிகாட்டுதலை இந்தியன் எண்ணெய் நிறுவனம் அறிவித்துள்ளது. இதன்படி உறவினர், நண்பர்கள் திருமணத்துக்கு பரிசளிக்க விரும்புவோர், கூப்பன்களை வழங்கலாம். அதனை பயன்படுத்தி, அவர்கள் பெற்றோல் அல்லது டீசலைப் பெறலாம்.

இதுகுறித்து இந்தியன் எண்ணெய் நிறுவனம் சமூக வலைதளத்தில் கூறி உள்ளதாவது: 'உங்கள் அன்புக்குரியவர்களின் புதிய தொடக்கங்களை மிகச் சிறப்பானதாக மாற்றுங்கள். திருமணங்களை கொண்டாட சிறந்த பரிசாக இந்தியன் எண்ணெய் நிறுவன எரிபொருள் கூப்பன் உள்ளது. அவற்றை 'ஒன்லைன்' வாயிலாக பெற்று, உங்கள் அன்புக்குரியவர்களுக்கு பரிசளியுங்கள்'. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# அமைச்சரவை தீர்மானங்கள்

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தலைமையில், நேற்றுமுன்தினம் (29) நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில

**01 பாடநெறியின் இயலளவு விருத்திக்கான கருத்திட்டம்**

கட்டுமானத் துறையில் உழைப்புப் படையின் கேள்வியைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலான உயர்ந்த தரத்துடனான தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரிகளில் கட்டுமானத் துறைசார் பயிற்சிப் பாடநெறிகளை விருத்தி செய்வதற்கான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (KOICA) 04 மில்லியன் அமெரிக்க டொலர்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்திற்கு 441,000 அமெரிக்க டொலர்கள் இலங்கை அரசாங்கம் பங்களிப்புச் செய்கின்றது.

அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆண்டு வரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தவும், அதற்கான அன்பளிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக KOICA நிறுவனத்துடன் ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காகவும் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**02. கிளிநொச்சி கட்டட நிர்மாண ஒப்பந்தம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உயிர்த்தொகுதித் தொழில்நுட்ப பீடத்திற்குத் தேவையான கட்டடங்களுக்கான கிளிநொச்சி கட்டட நிர்மாணக் கருத்திட்டம், உலக வங்கியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் Accelerating Higher Education Expansion and Development (AHEAD) Operation கருத்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்காக 2019 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**03 கட்டடத்தொகுதியை அமைத்தல்**

சப்ரகமுவ மாகாணத்தில் வாழ்கின்ற ஏறத்தாழ இரண்டு மில்லியன்கள் மக்களுக்கு இரத்தினபுரி போதனா மருத்துவமனையின் மூலம் சுகாதார சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குறித்த மருத்துவமனைக்குத் தேவையான வசதிகளுடன் கூடிய இதயநோய் சத்திரசிகிச்சைத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு அங்கிகாரம்.

**04. மலக்கழிவுகளை சேகரிக்கும் வலையமைப்பு**

இலங்கை அரசாங்கம் மற்றும் பிரான்ஸின் அபிவிருத்திக்கான முகவர் நிறுவனத்தின் நிதியனுசரணையின் கீழ் இரத்மலானை/மொரட்டுவை கழிவு நீர் அகற்றும் கருத்திட்டத்தின் 1 ஆம் படிமுறை - 2 ஆம் கட்டத்தின் கீழ் தற்போது காணப்படும் மலக்கழிவு சேகரிக்கும் வசதிகளை மேலும் விரிவாக்கம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**05. தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை**

இலங்கை பிரஜைகளிடமுள்ள இறைமையின் அடிப்படைக் கூறாக அமைவது சர்வசன வாக்குரிமையாகும். அது தேர்தலின் போது மக்கள் விருப்பாக சுதந்திரமானதாகவும் நியாயமானதாகவும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

தேர்தலின் போது ஏதேனுமொரு வேட்பாளர், கட்சி அல்லது குழுவொன்று மக்களுடைய வாக்குகளுக்காக எந்தவொரு கட்டுப்பாடுகளின்றி அதிகளவில் பணம் செலவிடுவதன் மூலம் பொதுமக்களின் விருப்பு தொடர்பாக குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இல்லாவிடின், கட்சியால் மேற்கொள்ளப்படும் செலவுகளைக் கட்டுப்படுத்தும் தேவைகள் தொடர்பாக இலங்கையில் கலந்துரையாடப்பட்டு வருவதுடன், இந்தியா உள்ளிட்ட அதிகமான நாடுகள் தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்தும் சட்ட ஒழுங்குகளை விதித்துள்ளன. தேர்தலின் போது இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளைக் குறைப்பதற்காகவும் ஏற்றவகையில் சட்டங்களை திருத்துவதற்கு அங்கிகாரம்.

**07. அறக்கட்டளையை உருவாக்க சட்டம்**

முதிர்வடைந்த மற்றும் ஆதரவற்ற நிலையிலுள்ள பிக்குமாருக்கான பராமரிப்பு நிலையமாக நடத்திச் செல்லும் கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலையத்தை சட்ட ரீதியான நிறுவனமாக மேற்கொண்டு செல்வதற்கு இயலுமான வகையில் அறக்கட்டளையை நிறுவுவதற்கான சட்டமூலமொன்றை தயாரிப்பதற்கான அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**08. மியன்மார் (பர்மா) இலிருந்து அரிசி இறக்குமதி செய்தல்**

பற்றாக்குறையின்றி போதுமானளவு அரிசியை நுகர்வோருக்கு விநியோகிப்பதற்கும், பாதுகாப்பான கொள்ளளவைப் பேணுவதற்கும் இயலுமான வகையில் 100,000 மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு 2021 செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கை அரசாங்கம் மற்றும் மியன்மார் அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் 20,000 மெற்றிக்தொன் அரிசியை, ஒரு மெற்றிக்தொன் 460 அமெரிக்கன் டொலர்களுக்கு வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்தின் மூலம் இறக்குமதி செய்வதற்கு அங்கிகாரம் வழங்கியுள்ளது.

மைசூர்

## தங்கையை பாலியல் பலாத்காரம் செய்த அண்ணன்

தங்கையை அண்ணனே பாலியல் பலாத்காரம் செய்ததால், தங்கை கர்ப்பிணியான சம்பவம் அதிர்ச்சியை அளித்துள்ளது.

மைசூர் நகரைச் சேர்ந்த, 17 வயது சிறுமி சமீப காலமாக வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்தார். மருத்துவமனையில் பரிசோதித்த போது மூன்று மாதங்கள் கர்ப்பிணியாக இருப்பது தெரிய வந்தது.

இது குறித்து சிறுமியிடம் மருத்துவர்கள் விசாரித்த போது, பெற்றோர் இழப்பால், இரண்டு அண்ணன்களுடன் வசித்து வருவதாகவும், மூத்த அண்ணன் மது அருந்திவிட்டு தன்னை அடிக்கடி பாலியல் பலாத்காரம் செய்து வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

பெங்களூர்

இறந்ததை மறந்த மருத்துவமனை:

## 16 மாதங்களாக உடல்களை தகனம் செய்யாத அவலம்

கொரோனா தொற்றால் உயிரிழந்த இருவரின் உடல்களை மறந்துபோய், 16 மாதங்கள் ஆகியும் தகனம் செய்யாமல் மருத்துவமனை பிணவறையிலேயே வைத்திருந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடகா மாநிலம் பெங்களூரில் வசித்து வரும் கணவன், மனைவி 2020ஆம் ஆண்டு கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு பெங்களூர் இ.எஸ்.ஐ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர். பின்னர் 2020ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.



அந்த நேரத்தில், கொரோனா முதல் அலை உச்சத்தில் இருந்ததால் , நோயாளிகளின் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படாமல், மருத்துவமனை நிர்வாகமே தகனம் செய்தது. இதனால், நோயாளிகளின் உறவினர்களுக்கு தகவல் சொல்லப்பட்டதுடன், உடல்கள் தகனம் செய்யப்பட்டதாகவும் மருத்துவமனை தரப்பில் தகவல் சொல்லப்பட்டுள்ளது.

ஆனால், கிட்டத்தட்ட 16 மாதங்களுக்கு மேலாக இருவரது உடல்கள் மருத்துவமனையின் பிணவறையிலேயே இருந்துள்ளன. பழைய பிணவறையை சுத்தம் செய்ய வந்த ஊழியர்கள் துர்நாற்றத்தை உணர்ந்து அங்கு தேடிப்பார்த்ததில், குளிர் சாதனப் பெட்டியில் பாதி அழுகிய நிலையில் இருவரின் உடலையும் கண்டனர். இருவரின் உடல்களை கவனிக்கவில்லை எனவும் மருத்துவமனையை சேர்ந்த சிலர் கூறியுள்ளனர்.

தென் ஆபிரிக்கா

# பயணத் தடையை நீக்க வேண்டும்

தென் ஆபிரிக்காவில் கண்டறியப்பட்ட `ஒமிக்ரான்` கொரோனாத் தொற்றுப் பரவலானது தற்போது உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் நிலையில் அதனை எதிர் கொள்ள குறைந்த அளவிலான பொதுமுடக்க கட்டுப்பாடுகளையே தொடரப் போவதாக



அந்நாட்டு ஜனாதிபதி சிறில் ரமபோசா (Cyril Ramaphosa) அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் " கொரோனா முதல் அலையை நாங்கள் எதிர்கொண்டபோது தடுப்பூசிகள் அதிகளவில் இல்லை; குறைந்த எண்ணிக்கையிலான மக்களே தடுப்பூசி செலுத்தியிருந்தனர் ஆனால், இப்போது நாடு முழுவதும் 12 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி கிடைக்கிறது. அதை கவனத்தில்கொண்டு இப்போதைய நிலையில் கூடுதல் கட்டுப்பாடுகளை விதிப்பதில்லை என்கிற முடிவை எடுத்துள்ளோம்" என்றார்.

மேலும் தென் ஆபிரிக்கா மற்றும் அதன் அண்டை நாடுகளின் பொருளாதாரம் மேலும் பாதிப்படையாமல் தவிர்க்கும் வகையில், அவற்றின் மீதான பயணத் தடைகளை நீக்க வேண்டுமெனவும் அவர் உலக நாடுகளை கேட்டுக்கொண்டுள்ளார்.



தாய்வான்

ஒரே ஆண்டில் அம்புலன்ஸை

## 39 முறை அழைத்த நபர்

நபர் ஒருவர் ஒரே ஆண்டில் 39 முறை அம்புலன்ஸ் சேவையை அழைத்த விநோத சம்பவம் தாய்வானில் இடம்பெற்றுள்ளது.

வாங் என அழைக்கப்படும் குறித்த நபர், அவசர மருத்துவ உதவி வேண்டும் எனக் கூறி அம்புலன்ஸை சேவையை அடிக்கடி தொடர்பு கொண்டு பேசுவதாகவும், இதனையடுத்து அவரை மீட்டு செல்லும் ஆம்புலன்ஸ் வாகன ஊழியர்கள் அவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அழைத்துச்செல்வதாகவும் எனினும் அவர் சிகிச்சை பெறாமல் அங்கிருந்து தப்பித்துச் செல்வதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் அவரது நடவடிக்கைகளை கவனித்த மருத்துவமனை ஊழியர்கள், பொலிஸாரிடம் இது குறித்து புகார் அளிக்கவே நபரைப் பிடித்து விசாரித்த பொலிஸாருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.



பாகிஸ்தான்

## பொலிஸ் நிலையத்திற்கு தீ வைத்த மக்கள்

ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றாகத் திரண்டு பாகிஸ்தானின் சர்சதா மாவட்டத்தில் உள்ள மந்தனி பொலிஸ் நிலையத்திற்குத் தீ வைத்த சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

> புகைப்படங்கள் சமூக வலைத்தளத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது

இஸ்லாமியர்களின் புனித நூலான குரானை பழித்துப்பேசியதாக கூறப்படும் மனநலம் குன்றிய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தமையைக் கண்டித்தே கடந்த 28ஆம் திகதி குறித்த பொலிஸ் நிலையத்திற்குத் தீ வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இச்சம்பவத்தின் போது பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அங்கிருந்த கார்களுக்கு தீ வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

சட்டத்தை கையில் எடுக்கும் நபர்களுக்கு தக்க பதிலடி தரப்படும் என அரசுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இதுதொடர்பான வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் சமூக வலைத்தளத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுவீடன்

## இராஜினாமா செய்த மெக்தலினா மீண்டும் பிரதமரானார்



சுவீடன் நாட்டின் பிரதமர் ஸ்டீபன் லேப்வென் அண்மையில் பதவி விலகியதை தொடர்ந்து, கடந்த 24ஆம் திகதி அந்நாட்டின் புதிய பிரதமராக சோசலிச ஜனநாயக கட்சியின் மூத்த தலைவரான மெக்தலினா அன்டர்சன் (Magdalena Andersson) தெரிவு செய்யப்பட்டார்.

இதன் மூலம் நாட்டின் முதல் பெண் பிரதமர் என்கிற பெருமையை பெற்றார். எனினும் துரதிர்ஷ்டவசமாக பிரதமராக தெரிவு செய்யப்பட்ட சில மணி நேரத்திலேயே அவர் பதவி விலகும் கட்டாயத்துக்கு தள்ளப்பட்டார்.

கூட்டணி ஆட்சியை அமைக்க அவரது கட்சிக்கு வழங்கிய ஆதரவை கிரீன்ஸ் கட்சி திடீரென திரும்பப்பெற்றது. அந்த நாட்டின் அரசியல் சாசன நடைமுறைப்படி கூட்டணிக்கட்சி ஆதரவை விலக்கிக்கொண்டால் அரசு பதவி விலகித்தான் ஆக வேண்டும். எனவேதான் பிரதமர் மெக்தலினா பதவி விலகினார்.

அமெரிக்கா

## தினமும் 3 குவளை சிறுநீர் குடிக்கும் பெண்

அமெரிக்காவைச் சேர்ந்த பெண்ணொருவர் தினம் 3 குவளைகள் சிறுநீர் குடித்து வருவதாக தெரிவித்துள்ளமை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.



அமெரிக்காவில் இருக்கும் கொலரடோ பகுதியைச் சேர்ந்த 53 வயதான பெண்ணொருவரே இவ்வாறு தனது சிறுநீரைக் குடித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் பிரபல ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் "நான் எனது இளம் வயதில் உடல்நிலை சரியில்லாமல் போனபோது, எனது சிறுநீர் குடிக்கத் தொடங்கினேன். அப்போது அதன் சுவை பிடித்ததால் தினந்தோறும் குடித்து வருகின்றேன். மேலும், என் சிறுநீரில் ஒவ்வொரு நாளும் புதிய சுவை இருப்பதாக உணர்கின்றேன். மேலும் சிறு நீரைக் குடிப்பதால் என் கண்களின் கீழ் உள்ள கருவளையம் மறைவதோடு என் முடியும் பற்களும் வலிமை பெறுகின்றன "என்றார்.

அமெரிக்கா

## ரோபோவுக்கு முகத்தை வழங்கினால் கோடீஸ்வரர் ஆகலாம்

அமெரிக்காவை சேர்ந்த ரோபோ தயாரிக்கும் நிறுவனமான ப்ரோமோபோட் (Promobot) ,மனித உருவிலான ரோபோக்களைத் தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

இந்நிலையில் அந்நிறுவனமானது அண்மையில் புதிய அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிவிப்பில் மனித வடிவில் உள்ள ரோபோக்களைத் தயாரிப்பதற்காக மனிதர்களின் முக மாதிரிகள் தேவைப்படுவதாகவும், அவ்வாறு முக மாதிரிகளை





வழங்குவோருக்கு 200,000 அமெரிக்க டொலர்கள் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அவ்வாறு தங்கள் முகமாதிரிகளைக் கொடுக்க முன்வருபவர்களுக்கு சில நிபந்தனைகளையும் அந்நிறுவனம் விதித்துள்ளது.

குறிப்பாக 25 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும், எனவும், அவரது குரலை அந்த ரோபோவிற்கு பதிவு செய்ய குறைந்தது 100 மணி நேரம் வார்த்தைகளை கூற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது டெஸ்ட்டில்

# 204 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த இலங்கை

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டின் முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 204 ஓட்டங்களை இலங்கை பெற்றுள்ளது.

காலியில் ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய இரண்டாம் நாளை ஒரு விக்கெட் இழப்புக்கு 113 ஓட்டங்களைப் பெற்றவாறு தமது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த இலங்கை, குறிப்பிட்ட நேரத்திலேயே ஒஷாத பெர்ணான்டோவை ஜோமெல் வொரிக்கானிடம் இழந்தது.

பின்னர் சிறிது நேரத்தில் வீராசாமி பெருமாளிடம் 73 ஓட்டங்களுடன் பதும் நிஸங்க வீழ்ந்ததோடு, தனஞ்சய டி சில்வாவும் உடனேயே அவரிடமும் வீழ்ந்ததோடு, தொடை உபாதை காரணமாக அஞ்சலோ மத்தியூஸும் களத்திலிருந்து வெளியேறினார்.

தொடர்ந்து சரித் அஸலங்க, தினேஷ் சந்திமாலும் பெருமாள், வொரிக்கானிடம் வீழ்ந்ததோடு, சிறிது நேரத்தில் ரமேஷ் மென்டிஸும் வொரிக்கானிடம் வீழ்ந்தார்.

இதனையடுத்து மத்தியூஸ் மீண்டும் துடுப்பெடுத்தாட



வந்தபோதும், சுரங்க லக்மால், லசித் எம்புல்தெனிய ஆகியோர் அடுத்தடுத்து பெருமாளிடம் வீழ்ந்ததோடு, இறுதியாக 29 ஓட்டங்களோடு மத்தியூஸும் வொரிக்கானிடம் விழ, சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 204 ஓட்டங்களை இலங்கை பெற்றது.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், அணித்தலைவர் கிறேய்க் பிறத்வெய்ட், ஜெர்மைன் பிளக்வூட் மூலம் நிதானமான ஆரம்பத்தைப் பெற்றது.

44 ஓட்டங்களுடன் பிரவீன் ஜெயவிக்கிரமவிடம் பிளக்வூட் வீழ்ந்த நிலையில், மழையால் தேநீர் இடைவேளைக்கு சற்று முன்பதாகவே ஆட்டம் முடிவுக்கு வந்த நிலையில், ஒரு விக்கெட் இழப்புக்கு 69 ஓட்டங்களைப் பெற்றவாறு மேற்கிந்தியத் தீவுகள் உள்ளது.



7ஆவது தடவையாக

## பலூன் டோரை வென்ற மெஸ்ஸி

ஏழாவது தடவையாக, உலகின் சிறந்த வீரருக்கான பலூன் டோர் விருதை ஆர்ஜென்டீனாவின் லியனல் மெஸ்ஸி வென்றுள்ளார்.

போலந்தின் றொபேர்ட் லெவன்டோஸ்கி, இத்தாலியின் ஜோர்ஜினியோவைத் தாண்டியே விருதை இம்முறை மெஸ்ஸி வென்றிருந்தார்.

மெஸ்ஸி 613 புள்ளிகளைப் பெற்ற நிலையில், லெவன்டோஸ்கி 580 புள்ளிகளையும், ஜோர்ஜினியோ 460 புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

இந்நிலையில், சிறந்த முன்களவீரராக லெவன்டோஸ்கியும், சிறந்த கோல் காப்பாளராக இத்தாலியின் ஜல்லுாயிஜி டொன்னருமா தெரிவானார். சிறந்த கழகமாக இங்கிலாந்து பிறீமியர் லீக்கின் செல்சி தெரிவாகியது.

சிறந்த வீராங்கனையாக ஸ்பெய்னின் அலெக்ஸியா புடெல்லஸ் தெரிவாகியிருந்தார்.

முதலாவது டெஸ்டில்

## பங்களாதேஷை வீழ்த்திய பாகிஸ்தான்




பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்டில் பாகிஸ்தான் வென்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், சட்டோகிராமில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய ஐந்தாம் நாளை விக்கெட் இழப்பின்றி 109 ஓட்டங்களுடன் தமது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான், அபிட் அலி, அப்துல்லாஹ் ஷஃபிக்கின் தொடர்ந்த இணைப்பாட்டம் மூலம் வெற்றியிலக்கை நோக்கி நகர்ந்தது.

ஷஃபிக் 73, அலி 91 ஓட்டங்களுடன் குறிப்பிட்ட இடைவெளிகளில் மெஹிடி ஹஸன் மிராஸ், தஜியுல் இஸ்லாமிடம் வீழ்ந்தபோதும், அஸார் அலி, அணித்தலைவர் பாபர் அஸாமின் இணைப்பாட்டத்தில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. களத்தில் அலி 24, அஸாம் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக அபிட் அலி தெரிவானார்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 330/10 (துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் 114, முஷ்பிக்கூர் ரஹீம் 91, மெஹிடி ஹஸன் மிராஸ் ஆ.இ 38 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹஸன் அலி 5/51, பாஹீம் அஷ்ரப் 2/54, ஷகீன் ஷா அஃப்ரிடி 2/70, சஜிட் கான் 1/79)

பாகிஸ்தான்: 286/10 (துடுப்பாட்டம்: அபிட் அலி 133, அப்துல்லா ஷஃபிக் 52, பாஹீம் அஷ்ரப் 38 ஓட்டங்கள். பந்துவீச்சு: தஜியுல் இஸ்லாம் 7/116, எபொடொட் ஹொஸைன் 2/47, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/68)

அம்பாறை இளைஞர் கழக மெய்வல்லுநர் விழா:

## சம்பியனான அக்கரைப்பற்று







■ ரீ.கே. றஹ்மத்துல்லா

அம்பாறை மாவட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான 33ஆவது மெய்வல்லுநர் விளையாட்டு விழாவானது, அட்டாளைச்சேனை அஷ்ரப் ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகப் பிரிவிகளிலிருந்தும் மூவினங்களையும் சேர்ந்த இளைஞர், யுவதிகள் கலந்து கொண்ட இவ்விளையாட்டுப் போட்டிகள் அனைத்திலும் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று அக்கரைப்பற்று பிரதேச செயலக இளைஞர் கழகம் சம்பியனாக தெரிவானது.

இவ்விளையாட்டு விழாவில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக இளைஞர் அணி இரண்டாமிடத்தையும், மூன்றாமிடத்தை நிந்தவூர் பிரதேச செயலக இளைஞர் அணியும் பெற்றுக் கொண்டன.

மகளிர் பிரிவில் பதியத்தலாவ பிரதேச செயலக இணி சம்பியனாகத் தெரிவானதுடன், இரண்டாமிடத்தை தொகியத்த கண்டி மகளிர் அணியினர் பெற்றுக் கொண்டனர்.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியன இணைந்து நடாத்திய இவ்விளையாட்டு விழா தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் டபில்யூ. ஏ. தமயந்தி தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டபில்யூ. டி. வீரசிங்க பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்ததுடன், கௌரவ அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ. அகமட் சாபீர் கலந்துகொண்டார்.

இவ்விழாவில், விசேட அதிதிகளாக அமைச்சர் விமல வீர திஸாநாயக்க, பிரதேச இணைப்பதிகாரிகள், விளையாட்டுத்துறை அதிகாரிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 01 டிசெம்பர் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.